பக்கங்கள் : பன்னிரெண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 22 வெள்ளிக்கிழமை (04.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 130

# மடுப் பகுதியில் கடும் சண்டை!

# மாதா சொரூபம் அகற்றப்பட்டது!!

## மக்கள் அங்கிருந்து முற்றாக வெளியேற்றம்

மன்னார்,ஏப்ரல்4

மடுப்பகுதியில் - தேவாலயச் சூழலில் - இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை கடும் சமர் நடைபெற்றது. இரண்டு தரப்புகளும் பரஸ்பரம் கடும் ஷெல் வீச்சில் ஈடுபட்டன.

சண்டையின் உக்கிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு மாதாவின் திருச்சொரூபம் நேற்று மாலை தேவாலயத்தில் இருந்து வேறு இடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. தேவாலயத்தின் அருட்தந்தையர் நால்வர் அங்கிருந்து அன்னையின் திருச்சொரூபத்தை எடுத்துச் சென்றனர்.

மடுத் தேவாலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் மோதல்கள் நடைபெற்று வருவதை அடுத்து அப்பகுதியில் இருந்து பொதுமக்கள் நேற்று முற்றாக வெளியேறி இருந்தனர்.

மடுதேவாலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களை அடுத்து ஏற்கனவே பலர் மடுப்பகுதியில் இருந்து வெளியேறி இருந்தனர். மோதல்கள் தீவிரம் அடைந்தால் வெளியேறுவதற்கான பாதைகள் மூடப்படலாம் என்ற அச்சம் பொது மக்கள் மத்தியில் நிலவுகிறது.

இதேவேளை, இராணுவம் தமது பகுதியை நோக்கி மேற்கொண்ட பாரிய முன்நகர்வை தாம் முறியடித்துள்ளதாகவும் இதன் போது 25 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மடுத் தேவாலயத்தில் இருந்து 1,500 மீற்றர் பகுதிக்குள் படையினர் வலிந்த பல முன்னகர்வுகளை மேற்கொண்டனர் என்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் எம்.பிக்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்4

இலங்கை நிலைவரம் குறித்து நேரில் கண்டறிவதற்காக விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவின் இரு உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்குச் வந்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோர்ஜ் மற்றும் ஸ்டீபன் ஆகியோர் யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஷைச் சந்தித்து, யாழ்ப்பாண மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் உட்படப் பல விடயங்கள் குறித்துக் கேட்டறிந்தனர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பின்னர் யாழ். நூலகத்திற்கும் சென்றனர்.

(அ-120-50)

## மடுமாதா அகதியாக வெளியேறிய அவலம்; கவலை தரும் கடினமான முடிவு - ஆயர் இராயப்பு

மன்னார்,ஏப்4

மடுத் தேவாலயப்பகுதியைச் சுற்றி நடைபெற்றுவரும் உக்கிர மோதல்களை அடுத்து மடுமாதா தேவாலயத்தின் திருவுருவச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஊர்ஜிதம் செய்தார்.

வரலாற்றில் சொந்தப் பிரதேசத்திலிருந்து முதன்முறையாக மடு மாதா தனது ஆலயத்தைவிட்டு அகதியாக வெளியேறிய அவல நிகழ்வு நடந்துள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

தேவாலய வளாகத்துக்கு அருகில் பல ஷெல்கள் வந்துவீழ்ந்து கொண்டிருக்கின்றன என்றும் இந்த நிலையில் அங்கு இருப்பது பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்ற முடிவுக்கு வந்த தேவாலய மதகுருமார், ஆலயத்தின் முக்கிய திருவுருவச் சிலையை அங்கிருந்து அகற்றிப் பாதுகாப்பான இடம் நோக்கி எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடுத் தேவாலயப் பகுதியை புலிகள் ஆக்கிரமித்ததாக ராணுவம் குற்றச்சாட்டு

வவுனியா,ஏப்.4

மடுதேவாலயப் பகுதியை விடுதலைப் புலிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த மடுத் தேவாலயப் பகுதியிலிருக்கும் குருமார்களையும் பிற மக்களையும் பயமுறுத்துவதற்காக இந்த தேவாலயப் பகுதியை நோக்கி மோட்டார் மற்றும் ஆட்லறி ஷெல்களை ஏவிக்கொண்டிருக்கிறார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

புனித மடுமாதா ஆலயம் இருக்கும் இடம் எது என்பது படையினருக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் மடுவிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறோம். எங்களது மனிதநேய நடவடிக்கைகள் எல்லாம் வடக்குப் பகுதியை நோக்கியே திட்டமிடப்படுகின்றன. மடு தேவாலயம் இருக்கும் திசையை நோக்கி அல்ல.

ஒரு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தவும் வன்னி முன்னணி தற்காப்பு எல்லையை தாண்டி பாதுகாப்புப் படைகள் நகர்வதை தடுக்கவும் விடுதலைப் புலிகள் இதைச் செய்கிறார்கள். இதுதான் அந்தப் பகுதியில் உள்ள நிலைவரம். பாதுகாப்பு படைகள், மடுப் பகுதியை நோக்கி எந்தத் தாக்குதலையும் நடத்தவில்லை - என்றும் உதய நாணயக்கார மேலும் கூறினார். (அ-2)

## ஜி.சி.ஈ. பரீட்சையில் குடாநாட்டில் 67 மாணவர்கள் 10 'ஏ' சிறப்புச் சித்தி

### வேம்படி மகளிரில் மட்டும் 22 பேர்


கு.நிருஜன்


ந.திருத்தணிகன்


ச.ருக்ஷிகா


சி.சுமங்கலி

யாழ்ப்பாணம்,ஏப்.4

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. (சாதாரண) தரப்பரீட்சையின் முடிவுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று நண்பகல் வெளியாகின.

முற்கொண்டு கிடைத்த முடிவுகளின் பிரகாரம் குடாநாட்டில் 15 பாடசாலைகளில் இருந்து 67 மாணவர்கள் 10 அதி விசேட சித்தியைப் பெற்றுள்ளனர்.

அவர்களில் ஆகக் கூடுதலான மாணவர்கள், அதாவது 22 மாணவர்கள் விசேட சித்திகளைப் பெற்று விசேட சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் வேம்படி

(11ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுக்கின்றனர்

வவுனியா,ஏப்.4

மடுமாதா தேவாலய வளாகத்துக்குள் புலிகள் நிலைகொண்டிருப்பதாக இராணுவம் தெரிவித்திருந்த குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

மடுக்கோவில் பகுதிகளில் மோதல்களை தவிர்த்து அந்தப் பிரதேசத்தின் அமைதியை பேணுமாறு கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பக்தர்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதிலும் கடந்த மூன்று தினங்களாக மடுக்கோவில் பகுதியை கைப்பற்றும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டிருந்ததாகவும் -

இந்த முயற்சி புலிகளின் எதிர்த்தாக்குதல்களின் மூலம் முறியடிக்கப்பட்டதாகவும் - புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இந்த நேரடி மோதல்களுக்கு முன்னரும் பின்னரும் இராணுவத்தினர் வேண்டுமென்றே மடுக்கோயில் பகுதியை இலக்கு வைத்தே மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வந்ததாகவும் -

இதனால் மடுப் பகுதியில் மதகுருமார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைக்கு 25 அணிகள் களத்தில்; தேர்தல்: மே பத்தாம் திகதியென நிர்ணயம்

கொழும்பு, ஏப். 04

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்வது நேற்று நண்பகலுடன் பூர்த்தியானதை அடுத்து தேர்தல் களத்தில் போட்டியில் இருக்கும் அணிகளின் விவரங்கள் வெளியாகின - தெளிவாகின.

நேற்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்து முடிந்ததும் மாகாண சபைக்கான தேர்தல் மே மாதம் பத்தாம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தலா இருபத்தியைந்துக்கும் அதிகமான அணிகள் களத்தில் குதித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னிரண்டு அரசியல் கட்சிகள், 15 சுயேச்சைக் குழுக்கள் என 27 அணிகளும் -

அம்பாறை மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகள், 25 சுயேச்சைக் குழுக்கள் என 38 அணிகளும் -

திருகோணமலை மாவட்டத்தில் 14 அரசியல் கட்சிகள் 17 சுயேச்சைக் குழுக்கள் என 31 அணிகளும் - களத்தில் இறங்கியுள்ளன.

முன்னதாக, திருகோணமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. உட்பட நான்கு கட்சிகளினது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இவை நீங்கலாகப் பெரும்பாலும் ஐ.தே. கட்சி, பிள்ளையான் குழுவையும் அரவணைத்துப் போட்டியிடும் அரசுத் தரப்பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்சங்கவாதி பஞ்சலிங்கம் காலமானார்



யாழ்ப்பாணம்,ஏப்ரல்.4

யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளராகக் (முன்பள்ளி) கடமையாற்றிய, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொது செயலாளர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் (வயது 57) நேற்றுக் காலமானார்.

நேற்றுமுன்தினம் திடீரென சுகயீனமுற்ற இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் நேற்று அதிகாலை மரணமானார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்

# மனோதத்துவ வைத்தியம் (CENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுக்கேற்றவாறு மருந்துகளைக் கொண்டு வருவார். ஏப்ரல் 7ஆம் திகதி முதல் சிலநாள்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் இருப்பார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவும், கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களை சந்தியுங்கள்.

Sexual Disorders (ஆண்மைச் சக்தி குறைவு)

(பிறவியிலே ஆண்மையற்றவர்களை தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும், திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்
ஏப்ரல் 07 ஆம் திகதிமுதல் சிலநாள்கள் மட்டும்
ASN சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
Contact No: 0777 569205, 021 222 5399, 2417 (சி/552087)


# கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி
உதவிக் கல்விப் பணிப்பாளர்

## அமரர். த. பஞ்சலிங்கம்



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும்,
சக உத்தியோகத்தரும்.

# கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய அதிபரும்,
பிரபல சமூகசேவையாளரும்
எமது குடும்ப நண்பருமாகிய

## சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா



அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

மயூரா ஹோட்டல்,
கொழும்பு. (C/552132)

மயூரா அன்பளிப்பகம்,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

யா/இணுவில் மத்திய கல்லூரி முன்னாள் உபஅதிபர்

## அமரர் வி.பரஞ்சோதி

அவர்களின் மறைவு குறித்து கண்ணீர்
அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்.
உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
(a) அதிபர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்

## சண்முகம்பிள்ளை சிவசிதம்பரம்

(ஸ்தாபகர், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திக்கா பிருந்தாவனம்)



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை சிவசிதம்பரம் (01.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சசிதேவியின் பாசமிகு கணவரும் சிவானுஜா (லண்டன்), சாயிநிகேதன்(டுபாய்), ஸ்ரீராம்நதிஷ், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிவண்ணனின் (லண்டன்) அன்பு மாமனரும், காலஞ்சென்ற சிவராயு மற்றும் யோகராணியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாந்தி(டென்மார்க்) மற்றும் ஸ்ரீதரன் (டுபாய்), செல்வராணி(யாழ்.பல்கலைக்கழகம்), புவனேந்திரா (டென்மார்க்), சந்திரா, ஆனந்தி, கிரிதரன் ஆகியோரிகன் மைத்துனரும். யோகராஜா, சத்தியா(கொழும்பு), செல்வராஜா, புனிதவதி (கனடா), சிவயோகம், பத்மராணி(கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (01.04.2008) செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

159/A, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
222 9295 (72742)

தகவல்:
திருமதி சசிதேவி சிவசிதம்பரம்
(ஸ்ரீராகவேந்திரா பிருந்தாவனம்)

# சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,ஏப்.4

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் புதுவருட தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ தினங்களான 10 நாள்களும் மதியம் அன்னதானமும் இடம்பெறும்.

# யாழ்.பிரதேச செயலக விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டிகள் நாளையும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன. (1)

# அழகியல் கண்காட்சி

கரவெட்டி,ஏப்.4

தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவர்களின் புத்தக அழகியற் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை மேற்படிகல்லூரி முறைசாரப்பிரிவில் பிரதி அதிபர் ம.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை முகாமைக்குரு டேவிட் அழகராசவும் கலந்துகொள்வர். (1-70)

# திருத்தி வாசிக்கவும்

உரும்பிராயைச் சேர்ந்த முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் நமசிவாயம் இரவீந்திரன் கொழும்பில் காலமானார்.

அவரது இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். அது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நேற்றைய உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான ந.இரவீந்திரனின் மரண அறிவித்தலில் அவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் என்று தவறாகப் பிரசுரமாகி விட்டது. அவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் என்று திருத்தி வாசிக்கவும்.


# வீடு விற்பனைக்கு

நல்ல சூழலில் அமைந்த சுற்று மதிலுடன் கார் நிறுத்தக் கூடிய வீடு சொய்சாபுரவில் (மொறட்டுவ பகுதியில்) உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவை இல்லை)
தொடர்பு:- 0112626912/0712361606


# தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், புகைப் படங்கள், பஞ்சாங்கம் மற்றும் சோதிடக் குறிப்புக்கள்(சாதகம்) போன்றன அடங்கிய பை ஒன்று யாழ்.றைஸ் றோட்டில்(மானிப்பாய் -இணுவில் வீதியில்) நேற்று பிற்பகலில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் எம்.குமாரவேல் (கலியாணப் புறோக்கர்), மடத்தடி லேன், மானிப்பாய் என்ற முகவரியில் அல்லது 021 222 3401 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். கேட்கும் சன்மானம் உடன் வழங்கப்படும்.


# ஸ்ரடி சேக்கிள்

கொற்றாவத்தை வல்வெட்டித்துறை

O/L Day Class

ஆரம்பம் 09.04.2008
புதன் காலை 8 மணி
கணிதம்: M.பரராஜசிங்கம்(பரம் சேர்)
விஞ்ஞானம்: N.மகேந்திரம்(மக்கி சேர்)

A/L 2010 கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி காலை 8am

கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ் - நாக. தமிழிந்திரன் | அளவையியல் -S.S.மனோகரன் |
| இ.நாகரிகம் -S.ஜெயக்குமார் | புவியியல் - S.P. கரன் |
| வரலாறு - பிரபல ஆசிரியர் | அரசியல் - N.றஜிதா |
| நா..அரங்கியல் - T.J.சுதன் | கிறிஸ்தவம் - K.யூட் |
| இந்துசமயம் - S.அனுசன் | பொருளியல் - P.S.குமார் |

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| கணக்கீடு - பாலகஜன் | வணிகக் கல்வி - பாலசபேஷ் |
| பொருளியல் - குமார் | |

தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்

BEACON யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் சேவை



35 வருடங்களாக தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்
1973 - 2008
O/L Day Class
ஏப்ரல் 10 இல் ஆரம்பம்
காலை 8.00 - பி.ப 1.00 வரை
இன்று முதல் பதியும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்


# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்



(உதவிக்கல்விப்பணிப்பாளர்(முன்பள்ளி), யாழ். வலயம், சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

கலைமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் நேற்று (03.04.2008) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
அரியாலை. (b)

தகவல்:
குடும்பத்தினர்

## நாகலிங்கம் தியாகராசா

(முன்னாள் ஒலி - ஒளி அமைப்பாளர்)

வடலியடைப்பு, மதவடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தியாகராசா நேற்று (03.04.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதியினரின் மகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், கலாவதி, லீலாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பதுமநிதி, கங்காதேவன் ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, கௌதம், மதுமிதா, கரிஷ்தேவன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தில்லைநாதன், ஞானம்மா, நடராசா, சொக்கலிங்கம் ஆகியோரின் சகோதரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (04.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதவடி,
வடலியடைப்பு (72745)

தகவல்:
பரிமளம் (மனைவி)

## இராமலிங்கம்(இராமு) தங்கம்மா



ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் (இராமு) தங்கம்மா நேற்று (03.04.2008) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் (இராமு) அவர்களின் அன்பு மனைவியும், செல்வரத்தினம் (யாழ்.பல்கலைக்கழகம்), தவரட்ணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தயாரும் உதயக்கமலம் (ஆசிரியர், யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), தனபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், தேனுகா, துவாரகா, கஸ்தூரி, இந்துஜா, கவிராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் ந.ப. 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தல்களை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. (C/552135)

தகவல்:
செல்வரத்தினம்
(மகன் - யாழ்.பல்கலைக்கழகம்)

## கார்த்திகேசு சின்னத்தம்பி

(தர்மகர்த்தா, மல்வில் கிருஷ்ணன் கோயில், இயக்கச்சி )

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், மல்வில், இயக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்போது சங்கத்தானையில் வசித்தவருமான கார்த்திகேசு சின்னத்தம்பி அவர்கள் நேற்று (03.04.2008) வியாழக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் இரத்தினத்தின் அன்புக்கணவரும், கமலரூபன் (சிறாப்பர், பிரதேச செயலகம், தென்மராட்சி) அவர்களின் அன்புத் தந்தையும் ரோகினி(ஆசிரியை , சாவகச்சேரி டிறிபேர் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, இலக்குமிப்பிள்ளை மற்றும் விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா, சிவபாக்கியம், இராசம்மா, சுப்பிரமணியம், சின்னம்மா, ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்மிகனின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2008) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (C/552134)

தகவல்:
சி.கமலரூபன்(கண்ணன்)
(மகன்-சிறாப்பர், பிரதேச செயலகம், தென்மராட்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வுப் பத்திரம் வழங்கும் நிலையத்தை வடமராட்சியில் நிறுவ நீதிமன்றம் அறிவுறுத்து

பருத்தித்துறை, ஏப்.4

குடாநாட்டில் தற்பொழுது சட்ட விரோதமாக மணல் அகழப்படும் நடவடிக்கைகள் தீவிரமாக்கியுள்ளன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மணல் தேவைப்படும் நபர்களுக்கு அவை இலகுவாக கிடைக்க வழிசெய்யப்படவேண்டும். அதன்பொருட்டு மணல் அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கும் நிலையம் வடமராட்சியில் அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் யாழ்.அரச அதிபர் கே.கணேசிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பாக நீதிபதி விடுத்த அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டவிரோத மணல் கடத்தல் குற்றச் செயல்களிலே யாழ்.செயலகத்தால் விநியோகிக்கப்படும் மணல் விநியோக அனுமதிப்பத்திரத்தில் மோசடிகள் செய்யப்படுவது பற்றி மன்றின் கவனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் அனர்த்தங்களினால் பொதுமக்களினதும் அரசினதும் கட்டடங்கள், வீதிகள், சொத்துக்கள் முழுமையாகவும், பகுதியாகவும் அழிவுக்குள்ளாகியுள்ளன. இக் கட்டடங்களை மீளப்புனரமைக்க வேண்டிய அவசியம் உண்டு. இதற்கு மூலப்பொருள்கள் முக்கியமாக தேவைப்படுகின்றன. இம் மூலப்பொருள்களின் விலைகள் மிக அதிகரித்தே காணப்படுகின்றன. இம் மூலப் பொருள்களில் மணலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

தேவையான மணல் ஒழுங்காக, சட்ட விதிகளுக்கு அமையக் கிடைக்காமையால் அரச, தனியார், ஆலயக் காணிகளிலும் கடற்கரையிலும் ஆயுதங்கள் சகிதம் மக்களை அச்சுறுத்திச் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு வருகின்றது. இக் குற்றச் செயல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதனால் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டு வருவதுடன் பயங்கர விளைவுகளும் ஏற்பட இடமுண்டு.

**சுனாமி அனர்த்தம்**

சுனாமி அனர்த்தம் வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு அழிவுகளையும் இழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இக் கட்டடங்களை மீளப்புனரமைப்புச் செய்வது இன்றைய முக்கிய தேவையாகும். அதனால் மக்கள் மணலைப் பெற்றுக் கொள்ள முண்டியடிக்கின்றனர்.

இதனால் பல சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச் சட்டவிரோத நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துவதற்கு மணல் தேவைப்படுபவர்களுக்கு இலகுவாக மணல் கிடைக்கச் செய்ய வேண்டியது முக்கியமாகவுள்ளது.

மணல் விநியோகப்பத்திரம் யாழ்ப்பாணச் செயலகத்தால் வழங்கப்படுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் அகழப்படும் இம் மணலைப் பெற்றுக்கொள்வதற்கு வடமராட்சிப் பிரதேசத்திலேயே அனுமதிப் பத்திரம் வழங்கும் நிலையம் ஒன்று திறக்கப்பட்டு மக்கள் மணலைப் பெற்றுக் கொள்வதற்கு இலகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால் இக் குற்றச் செயல்க ளைக் கட்டுப்படுத்த கூடிய நிலை ஏற்படும்.

வாகனங்களுக்கு வழங்கப்படும் மணல் அனுமதிப் பத்திரங்களின் தேவைகள் பூர்த்தியானதும் அம் மணல் அனுமதிப்பத்திரம் செயலகத்தால் மீளப் பெறப்பட வேண்டும். மீளப்பெறப்பட்ட பின்பே புதிய மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவேண்டும். இல்லையேல் பழைய மணல் அனுமதிப்பத்திரங்களில் மோசடிகள் செய்யப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்ந்து கடத்தப்படும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (218)

# 616 முன்பள்ளிகளுக்கு முதலுதவிப் பொருள்களை போரூட் வழங்கியது

யாழ் மாவட்டத்திலுள்ள 616 முன்பள்ளிகளுக்கு போரூட் நிறுவனம் முதலுதவிப் பெட்டிகளையும் அதற்குரிய மருந்துப் பொருள்களையும் வழங்கியுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக இந்தப் பொருள்கள் முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அடிப்படை முதலுதவி, பிள்ளைகளின் பற்சுகாதாரம், தனிநபர் சுகாதாரம் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (202)

# நவாலி பொதுச் சந்தையை அதிகாரிகள் குழு பார்வையிட்டது

## 'உதயனின்' செய்திக்குப் பலன்

நவாலி,ஏப் 4

நவாலி பொதுச் சந்தையை சுகாதார அதிகாரிகள் குழு நேரில் சென்று பார்வையிட்டதுடன் சுகாதார நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

நவாலிச் சந்தையின் சீர்கேடுகள் குறித்து கடந்த சில தினங் களுக்கு முன்னர் 'உதயன்' சுட்டிக் காட்டியிருந்தது. இதையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அதிகாரிகள் குழு சந்தையை நேரில் சென்று பார்வையிட்டது. தொடர்ந்து அங்கு பற்றையாக காணப்பட்ட புல், பூண்டுகள் என்பன அகற்றப்பட்டு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுக்கிணறும் இறைத்து சுத்தம் செய்யப்பட்டுள்ளது. (202-100)




# மதுபான விற்பனை நிலையத்தில் திருட்டு

அச்சுவேலி,ஏப். 4

புத்தூர், சுன்னாகம் வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்திலிருந்து ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மதுபான வகைகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இரவு மதுபான சாலையின் கதவுகளின்பூட்டுகளை உடைத்து திறந்து உள்ளே புகுந்த திருடர்கள் உள்நாடு, வெளிநாடு மதுபானவகைகளைதிருடிச் சென்றுள்ளனர். சில மதுபான போத்தல்கள் அருந்திய குறையாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இத் திருட்டுத் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (202-11)

# சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை கட்டட வேலைகள் மீள ஆரம்பிக்கப்படும்

## "உதயன்" வாசகர் திருமுகத்துக்குப் பணிப்பாளரின் ஆக்கபூர்வ பதில்

யாழ்பாணம், ஏப். 4

நிறுத்தப்பட்டிருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று - யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி உதயன் பத்திரிக்கையின் வாசகர்திருமுகம் பகுதியில் தி. சிற்றம்பலம் என்பவரால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக் கட்டடங்கள் தொடர்பாக எழுதப்பட்ட கடிதத்துக்கு விளக்கமளித்து எழுதியுள்ள கடிதத்தி லேயே அவர் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் இது குறித்து தெரிவித்திருப்பதாவது:

யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை மீள் நிர்மாணிக்க நிக்கொட் (Necord) திட்டத்தின் கீழ் இரண்டு மாடிகளைக் கொண்ட நிர்வாக அலகுடன் இணைந்த வெளி நோயாளர் பிரிவும், இரண்டு மாடி விடுதிக்கட்டடமும், வைத்திய அதிகாரிகளுக்கான விடுதியும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு மேலதிக FIDR என்ற ஜப்பானிய நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு மாடிகளைக் கொண்ட சிறுவர் விடுதியும் அமைக்கப்பட்டு வந்தது.

2005 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலைகள் 2005/2006 ஆம் ஆண்டுகளில் சீராக நடைபெற்று வந்தன. ஆனால் 2006 ஓகஸ்ட் மாதம் தரைவழிப்பாதை மூடப்பட்டமையால் அனைத்து கட்டடப்பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

தற்பொழுது கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் சீராக கிடைக்கின்ற படியால் இடைநிறுத்தப்பட்ட இக் கட்டடப்பணிகளை நாம் மீள ஆரம்பிப்பதற்கு பலதடவைகள் முயற்சி எடுத்தோம் அதற்கான அனுமதி தற்போது எமக்குக் கிடைத்துள்ளது.

**சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நிக்கொட் நிதியின் பெரும் பகுதி ஒதுக்கீடு**

குறித்த கடிதம் பிரசுரிக்கப்படுவதற்கு முதல்நாள் 24.03.2008 அன்று அரச அதிபர் தலைமையில் கச்சேரியில் நடை பெற்ற நிக்கொட் திட்ட கூட்டத்தில் சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலை கட்டடங்களை மீள கட்டியெழுப்ப முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சுகாதார திணைக்களத்திற்கு நிக்கொட் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியின் பெரும் பகுதி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது சிபார்சின் படி மாகாண மட்டத்திலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுமதி கிடைத்ததும். கேள்விப்பத்திர நடைமுறைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு கட்ட வேலைகள் மீள ஆரம்பமாகும்.

தற்பொழுது சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர்களும் பணியாளர்களும் எதிர்நோக்கும் சிரமங்களை நாம் நன்கு அறிவோம். அதனைக் கருத்தில் கொண்டு பழைய சத்திரசிகிச்சை விடுதி புனரமைக்கப்பட்டு ஆண்கள் விடுதியாக பாவிக்கப்பட்டு வருகின்றது. பிணஅறையும் புனரமைக்கப்பட்டுள்ளது.

எனவே இம் மடலில் குறிப்பிட்டுள்ள படி அதிகாரிகள் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையை மறந்துவிடவில்லைஎன்பதைக் கூற விரும்புகின்றேன்-என்று உள்ளது (131)



பிரம்மஸ்ரீ சபா-உமாபதிசர்மா எழுதிய "இந்து திருக்கோவிற்கலை" நூலின் வெளியீட்டு விழா அண்மையில் சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு தலைமைவகித்த வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையுரை நிகழ்த்துவதையும் வெளியீட்டுரை நிகழ்த்திய பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கா.வேதநாதன் மற்றும் கலாநிதி சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக் குருக்கள், நூலாசிரியர் ஆகியோர் மேடை யில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம் *(படம்:- வலி.தென் மேற்கு செய்தியாளர்)*

# யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் 24 பேருக்கு ஈரல் அழற்சித் தொற்று!

## இப்போது கட்டுப்பாட்டில் எனத் தெரிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்று நோயாளர் விடுதியில் தங்கியிருந்தவர்களில் 24 பேருக்கு ஈரல் அழற்சித் தொற்று (Hepatitis-B) இருந்தமை அண்மையில் பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து உதயனுக்கு தெரியவந்தது.

எனினும் உடனடியாக இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் மூலம் இந்தத் தொற்று வெகுவாக குறைவடைந்துள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்தன.

புற்றுநோய் விடுதியில் தங்கியிருந்தவர்களில் 24 பேருக்கு இந்தத் தொற்று இருந்தமை கடந்த சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஒருவர் மட்டும் நோயாளியை பராமரிப்பதற்காக வந்திருந்தவர் எனவும், ஏனையோர் அங்கு தங்கியிருந்த நோயாளர்கள் எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

மீண்டும் மீண்டும் இரத்தம் ஏற்றுதல் (Repeated Blood Transfusion) நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவராக இருத்தல், 'சிறிஞ்' தட்டுப்பாடான காலங்களில் அவை மீளப்பாவிக்கப்பட்டமை, அவற்றை உரியமுறையில் தொற்று நீக்காமை, புற்றுநோய் விடுதியில் இட நெருக்கடி காரணமாக தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு இருத்தல் போன்ற காரணங்கள் இந்தத் தொற்று ஏற்பட்டமைக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது இந்தத் தொற்று முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குகொண்டுவரப்பட்டுள்ளதாகவும், மேலும்பரவாமல்முன்னேற்பாடு நடவடிக்கைகள் [illegible] வும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன

# வடமராட்சி ஆசிரியர், மாணவர்களுக்கு கடன் அடிப்படையில் கணனிகள்

யாழ்ப்பாணம்,ஏப். 4

நெல்லியடி கணனிக் காட்சியகம் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு கடன் அடிப்படையில் கணனிகளை வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

வடமராட்சிப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான நடவடிக்கைகளை நெல்லியடி கணனி காட்சியக முகாமையாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா மேற்கொண்டுள்ளார்.

முதற்கட்ட நடவடிக்கையாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு கடன் திட்ட அடிப்படை யில் 27 கணனிகளை வழங்கி இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கணனிக் காட்சியக முகாமையாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா கணனிகளை வழங்கித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடமராட்சியிலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் இலகு கடன் அடிப்படையில் கணனிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கணனிக் காட்சியகம் தெரிவித்துள்ளது. (202-218)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 9,575,958 சதுர மீற்றர் இன்னும் வெடிபொருள் அபாயப் பிரதேசம்

நமது நாட்டில் நீண்ட காலமாக இடம் பெற்றுவரும் போரில் ஈடுபட்டுவரும் இரு சாராருக்கும் மிதிவெடிகள், வெடிபொருள்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்பது யாவரும் அறிந்ததே. மிதிவெடிகள் புதைக்கப்படுவதற்குரிய காரணம் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக தான் என இரு சாராரும் காட்டிக் கொண்டபோதிலும் இவை அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கியதை விட அப்பாவிப் பொதுமக்களை பாதித்ததே அதிகம் எனலாம். இம் மிதிவெடிகளின் தாக்கங்களினால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டும் முடமாக்கப்பட்டும் உள்ளனர். யுத்தம் நடைபெற்ற, நடைபெறும் பிரதேசங்களில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து செல்கின்ற போதிலும் அவர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேறும்போதே மிக அதிக அளவிலான மிதிவெடி, வெடிபொருள் விபத்துகள் சம்பவிக்கின்றன; சம்பவித்துமுள்ளன. பொதுமக்களுக்கு மிதிவெடிகள், வெடிபொருள்கள் பற்றிய பூரண விழிப்புணர்வு இல்லாததே இதற்குரிய பிரதான காரணமாகும்.



1995ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர முற்பட்டபோதே மிக அதிக அளவு மிதிவெடிகளால் விபத்துக்குள்ளாகி தமது உயிர்களையும அவயவங்களையும் இழக்க நேரிட்டது. இவர்களுக்கு மிதிவெடிகள்/ வெடிபொருள் பற்றிய அறிவு சிறிதேனும் இருக்கவில்லை. மிதிவெடி புதைக்கப்பட்ட பிரதேசங்கள் எவை என்பது மக்களால் இனங்கண்டறிய முடியவில்லை. இப்பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. இக்காலப்பகுதியில் மிதிவெடிகள், வெடிபொருள்களால் ஏற்பட்ட விபத்துக்களின் சரியான முழுமையான தரவுகள் இன்னமும் சரியாகக் கிடைக்கப்பெறவும் இல்லை. இவற்றுக் கிடையில் இருசாராருக்கும் இடையில் நடைபெற்றுவந்த உள்நாட்டு யுத்தமானது ஏறத்தாழ 2001 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் ஓரளவு தணிந்து 2001ஆம் ஆண்டு டிசெம்பர் அளவில் முழு அளவில் முடிவுக்கு வந்தது. நோர்வே நாட்டு அனு சரணையுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங் கமும் விடுதலைப் புலிகளும் 2002 பெப்ரவரி 23 இல் கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது. இதன்போதே மிதிவெடி அகற்றலுக்கான முக்கியத்துவமும் மிதிவெடிபொருள்களும் சம்பந்தமான விழிப்புணர்வு செய்ய வேண்டிய அவசியமும் உணரப்பட்டது.

### மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பமாகியது

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மிதிவெடியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தத்தம் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முன்னெடுக்க உறுதியளித்து அதற்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. சில குறித்த அரச சார்பற்ற மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம், யுனிசெப் ஆகியன

## இதன் ஆபத்திலிருந்து விடுபட எல்லோரிடமும் விழிப்புணர்வு அவசியம்

இலங்கை அரசாங்க ஒத்துழைப்புடன் மிதிவெடி செயற்பாட்டுத் திட்டத்தினை முன்னெடுக்க ஆரம்பித்தன. யாழ். குடாநாட்டில் ஹலோரஸ்ட், டெனிஷ் மிதிவெடி அகற்றும் நிறுவனம் என்பன இவற்றில் முக் கியமானவை.

2002ஆம் ஆண் டில் யுஎன்டிபி ஆதரவுடன் மாவட்ட மிதி வெடி செயற்பாட்டு அலுவலகமும் ஹலோரஸ்ட் நிறுவ னமும் இணைந்து மிதி வெடிப் பிரதேசங்களை இனங்காணும் ஆய் வில் ஈடுபட்டு மிதிவெடி அபாயப் பிரதேசங்கள் இனங்காணப்பட்டன. 2002ஆம் ஆண்டில் 11,000,000 சதுரமீற்றர் நிலப்பரப்பு மிதிவெடி அபாய பிரதேசங்களாக மா.மி.செ. அலுவலகத்தால் அறிக்கையிடப்பட்ட போதிலும் 2002க்கு பிறகு இப்பரப்பு 13,569,287 சதுர மீற்றராக அதிகரித்தது.

### ஆபத்தான பகுதிகளுக்கு முன்னுரிமை

மிதிவெடி அபாயப் பிரதேச ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஆபத்தான பகுதிகள் முன்னுரிமையடிப்படையில் பிரிக்கப்பட்டு மிதிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கு மிதிவெடி அகற்றலுக்காக, யாழ் அரச அதிபர், இலங்கை இராணுவ யாழ் மாவட்ட தளபதியின் ஒப்புதலோடும் மா.மி.செ. அலுவலகத்தால் வழங்கப்பட்டு மிதிவெடி அகற்றல் தொடர்ந்து இன்று வரை நடைபெற்று வருகின்றது.

2007 இறுதிப் பகுதி வரை ஏறத்தாழ 9,000,368 ச.மீ. நிலப்பரப்பு மிதிவெடி அகற்றப்பட்டு, மக்களின் பாவனைக்கென அந்தந்த பிரதேச செயலாளர், கிராம சேவையாளருடாக வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் ஏறத்தாழ 5,922,961 ச.மீற்றர் நிலப்பரப்பில் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. ஆயினும் இன்னும் மிதிவெடி அகற்றப்படாமல் 9,575,958 ச.மீ. நிலப்பரப்பு மிதமுள்ளதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மிதிவெடி அகற் றல் செயற்பாடுகளின் ஒரு சிறப்பான அம்சம் யாதெனில் மக்கள் பாவனைக்கு கைய ளிக்கப்பட்ட மிதிவெடி அகற்றப்பட்ட நிலப்பரப்பானது. மக்கள் வாழ்வதற்கும், தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் உயர் முன்னுரிமை கொடுக்கப்பட்ட இடங்களே மிதிவெடி அகற்றப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துச் செயற்பாடுகளிலும் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், மிதிவெடி அகற்றல் நிறுவனங்களினதும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவினர் போன்றோருக்கிடையில் ஒரு இணைப்புப் பாலமாகச் செயற்படுகிறது.

மிதிவெடி விழிப்புணர்வைப் பொறுத்தவரையில் யுனிசெவ் நிறுவனமானது அரசு சார்பற்ற நிறுவனங்களான வெண்புறா நிறுவனம், சர்வோதய நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கல்வி/நடவடிக்கைகள் போன்றவற்றைப் பல்வேறு வழிகளிலும் வழங்கிவருகிறது. மக்களுக்கு இந்நிறுவனங்களால் விழிப்புணர்வு வழங்கப்படுகின்ற போது மக்களில் மிதிவெடி/ வெடிபொருள் அபாயம் சம்மந்தமான பாதுகாப்பு உணர்வுகள்/ அத்துடன் மனப்பாங்கில் மாற்றங்கள் ஏற்படு கின்றன.

மிதிவெடி விழிப்புணர்வு நடவடிக்கைகளானவை கடந்த காலங்களில் மக்களுக்கு தொடர்ச் சியாக வழங்கப்பட்டதன் காரணமாக மிதி வெடி, வெடிபொருள் களால் ஏற்பட்ட விபத்துக்கள் கணிசமான அளவு குறைவடைந்து வந்துள்ளமை இனங் காணப்பட்டுள்ளது. மா.மி.செ அலுவலகத் தரவுகளின்படி 2001 இல் 90 விபத்துக் களும், 2002இல் 70 விபத்துக்களும் 2003இல் 50விபத்துக்களும் 2004இல் 20 விபத்துக்களும் 2003இல் 23 விபத்துக்களும் 2006இல் 9விபத்துக்களும் 2007இல் ஒரு விபத்தும் இதுவரை அறிக்கை இடப்பட்டுள்ளன. இது மிதிவெடி அபாய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் எந்த அளவு சென்றடைந்துள்ளது என்பதற்கு நல்ல சான்றாக அமைகிறது.

தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும்



அபிவிருத்தி அமைப்பு வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கை அரசாங்கமானது 2008 ஆம் ஆண்டில் மிதிவெடி அகற்றல் விழிப்புணர்வு செயற்பாட்டு திட்டங்களில் முழு அர்ப்பணிப்புடன் பங்கெடுக்கும் எனவும், 2008 ஆம் ஆண்டு முடிவில் மிதிவெடிகள் முழுதாக அகற்றப் பட்ட நாடாக இலங்கை இருக்கவேண்டும் என விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளது (இதில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அடங் கவில்லை).

மிதிவெடிகள், வெடிபொருள்கள், புதைக்கப்படுவதும், பாவிக்கப்படுவதும், போரில் ஈடுபடும் சாராரின் கைகளிலேயே தங்கியுள்ளது. இலங்கையில் போரானது நிரந்தரமான ஒரு முடிவுக்கு வரும்வரை மிதிவெடி வெடிபொருள்களால் ஏற்படும் ஆபத்துக்கள் ஒரு போதும் முடிவுக்கு வராது என்பது யாவரும் அறிந்த ஒன்றே. உண்மையும் அதுவே.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் மிதிவெடி, வெடிபொருள்கள், விழிப்புணர்வு, செயற்பாட்டுத் திட்டங்களுக்கு மக்களாகிய நாங்கள் எம்மால் இயன்ற பூரண ஆதரவு வழங்க வேண்டியது எமது கடமையும் பொறுப்பும் ஆகும். இலங்கை, மிக விரைவில் மிதிவெடி- வெடிபொருள் ஆபத்தற்ற நாடாக மாறவேண்டும் என்பதே யாவரினதும் விருப்பமாகும்.

**கே.வசந்தகுமார்.**
**இணைப்பாளர், மிதிவெடி அபாயக் கல்வி சர்வோதயம்**


## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரலிங்கம் ஜெயலீலா (மாலா)



வடமராட்சி, வல்வெட்டி, அடைப்பை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் ஜெயலீலா (மாலா) 29.03.2008 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் (குயில்-லண்டன்) அன்பு மனைவியும் இராசு - சின்னக்கண்டுவின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இராசசிங்கம்-அழகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் நிரோசனாவின் (நிரோ, லண்டன்) அன்புத் தாயும் விஜயசுரேசின் அன்பு மாமியும் சிவம் (சுவிஸ்), ஜெயலலிதா (வல்வெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயா (அம்மன்-சுவிஸ், நித்தியானந்தம் (வல்வெட்டி) ஆகியோரின் மைத்துனியும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2008) சனிக்கிழமை லண்டனிலுள்ள TRINITY CENTRE, EAST AVENUE, MANOR PARK, E12 - 6SG எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின் றோம்.

தகவல்:
சி.நித்தியானந்தம்
(மைத்துனன்)

அடைப்பு,
வல்வெட்டி. (72732)

## விற்பனைக்கு

தரமான கொங்கிறீற்று கற்கள் உண்டு. கொங்கிறீற்று கற்கள் ஓடருக்கு தயாரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 222 8193 (யுகத்ஸ்வரா)
25, சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குளி. (72735)

## ஆங்கில/கணனி வகுப்புகள்

க.பொ.த. உயர்தர, சாதாரண மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏனையவர்களிற்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

உங்கள் பதிவுகளை 15.04.2008 இற்கு முன் மேற்கொள்ளவும்.

தொடர்பு: 021 222 8193
25,சோமசுந்தரம் வீதி,
சுண்டுக்குழி (72736)


## அறிவித்தல்

இன்று தொடக்கம் V.S.P நல்லெண்ணை சில்லறை விலை 500/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் அறியத்தருகின் றோம்.

யாழ்ப்பாணம். (72722)

## மரண அறிவித்தல்

### செல்லையா சின்னத்துரை (ஆசிரியர்)



நந்தாவில் கொக்குவிலை பிறப்பிடமாகவும் Bradford வசித்து வந்தவருமான செல்லையா சின்னத்துரை (ஆசிரியர்) 29.03.2008 அன்று காலமானர்.

காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை (மலேசியா), காலஞ்சென்ற ராசலிங்கம் (கோண்டாவில்) ஆகியோரின் சகோதரரும், செல்வகுமாரி பத்மநாதன் (பிராட்போட், ஐக்கிய இராட்சியம்), செல்வக்குமார் (நியூகாசில், அவுஸ்திரேலியா), ஜெயகுமாரன் (மெல்போன், அவுஸ்திரேலியா), நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த சிவம் (வளர்ப்பு மகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பத்மநாதன் (பிராட்போட், ஐக்கிய இராட்சியம்), பிரியாந்தி (நியூகாசில், அவுஸ்திரேலியா), மதிவதனி (மெல்போர்ன், அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், ஐக்கிய இராட்சியத்தை சேர்ந்த அகிலன், சாந்தினி, நிமலன், கயிலன் மற்றும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த கார்த்திக், கவிதா, துவாரகா, நந்தனன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற நாகம்மா, ஜெகரூபி (கொழும்பு), காலஞ்சென்ற ஜெகநாதன், காலஞ்சென்ற கமலநாதன், காலஞ்சென்ற மங்களாதேவியின் ராஜேஸ்வரி (மலேசியா), யோகராஜலட்சுமி (கனடா) ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். கண்டி.புனித சில்வேஸ்ரர் கல்லூரி, உரும்பிராய்.சைவ தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும், முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஏப்ரில் 5ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு ஐக்கிய இராட்சியத்தில் பிராட்போட் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
44. St. ABBS Drive,
Bradford BD61EN, UK
Tel: 01274677912


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட 'எக்ஸ்போ எயார்' யாழ்.முகாமையாளர் கு.வசீகரன், திருமதி சுபத்திரா வசீகரன், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா ஆகியோர் பான்ட் வாத்திய சகிதம் மைதானத்திற்கு அழைத்துச் செய்யப்படுவதை முதலாவது படத்திலும் -

பிரதம விருந்தினர் கு.வசீகரன் உரையாற்றுவதையும் மேடையில் திருமதி சுபத்திரா வசீகரன், பாடசாலை உப அதிபர் திருமதி இ.மகாரத்தினம், வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் களான என்.நந்தகுமார், எஸ்.உதயகுமார் மற்றும் நெல்லியடி ம.ம.வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராசா ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

மாணவர்களின் இடைவேளை நிகழ்வை மூன்றாவது படத்தில் காணலாம். (203)

# கோப்பாய்ப் பிரதேச விளையாட்டு விழா இன்றுமுதல் மூன்று தினங்கள் நீர்வேலியில்

நீர்வேலி,ஏப்.4

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் இன்றுமுதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலக முன்றிலில் இருந்து சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நாளை காலை 6.30 மணிமுதல் தடகளப் போட்டிகள் இடம்பெறும்.

கோப்பாய் பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அன்று பிற்பகல் 1.30 மணிமுதல் இறுதி நிகழ்வுகள் அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

அன்று இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதியாட்டத்தில் றோயல் வி.கவும் திருக்குமரன் வி.கவும் மோதும்.

கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (1-110)

# மாவட்ட மட்ட பெருவிளையாட்டு 11ஆம் திகதி ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுக்கள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டிகளின் விவரம் வருமாறு:

| திகதி | நேரம் | விளையாட்டு | பிரிவு | இடம் |
|---|---|---|---|---|
| 11,12.04.2008 | 8.00 மணி | கூடைப்பந்து | 19 வ.கீ.ஆண் | யாழ்.பல்கலைக்கழகம் |
| 14.04.2008 | 8.00 மணி | பட்மின்டன் | 19 வ.கீ.ஆண் | சென்.ஜோன்ஸ் கல்லூரி |
| 15.04.2008 | 8.00 மணி | மேசைப்பந்து | 19 வ.கீ.ஆண் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி<br>யாழ்.மத்திய கல்லூரி |
| 15.04.2008 | 8.00 மணி | சதுரங்கம் | 15,19 வ.கீ.பெண் | வேம்படி மகளிர் உ.த.பாடசாலை |
| 16.04.2008 | 8.00 மணி | மேசைப்பந்து | 19 வ.கீ.பெண் | யாழ்.மத்திய கல்லூரி |
| 16.04.2008 | 8.00 மணி | சதுரங்கம் | 15,19 வ.கீ.ஆண் | வேம்படி மகளிர் உ.த.பாடசாலை |
| 17.04.2008 | 8.00 மணி | பட்மின்டன் | 19 வ.கீ.பெண் | சென்.ஜோன்ஸ் கல்லூரி<br>சுண்டுக்குளி மகளிரி கல்லூரி |
| 18,19,20.04.2008 | 8.00 மணி | கூடைப்பந்து | 19 வ.கீ.பெண் | யாழ்.பல்கலைக்கழகம் |

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.4

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (1-250)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.4

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

✱ சுன்னாகம் றோயல் வி.க., எதிர் சுன்னாகம் காந்தியமன்ற வி.க.

✱ உடுவில் ஐக்கிய வி.க., எதிர் இணுவில் கலாஜோதி வி.க. (1-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதமவிருந்தினராக் கலந்துகொள்ளவுள்ளார். (1)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.4

பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெகநாயகி தலைமையில் கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் க.ப.ஆனந்தநடேசன் கலந்துகொள்கிறார். (1-218)



சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம வீருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் ப.சிவநாதன் கொடியேற்றி நிகழ்வை ஆரம்பித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் வி.க. மென்பந்தாட்டத்தில் கேடயம் சுவீகரித்தது



வெற்றிபெற்ற அணியினர்

வலி.வடக்கு, ஏப்.4

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் 5 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பாகீஸ்வரன் 18, மகிழன் 11 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

நிரூபன் ஒரு ஓவரில் 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் பிரணவன், பிரகலாதன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் 5 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை இழந்து 26 ஓட்டங்களைப் மட்டும் பெற்றுக்கொண்டது.

பிரணவன் 12, நிரூபன் 07 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

கபில், மகிழன், துவிசாந் முறையே 4, 5, 6 ஓட்டங்களுக்குத் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# சங்கானைப் பிரதேச வலைப்பந்தாட்டத்தில் வட்டு. இந்து வாலிபர் சம்பியனானது

வலி.வடக்கு, ஏப்.4

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் விளையாட்டுக் கழகமும் சங்கானை இந்து வாலிபர் சங்கமும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் ஆரம்பத்தில் சுறுசுறுப்பாக விளையாடியபோதிலும் பிற்பகுதியில் சங்கானை இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகம் சற்று பின்தங்கிய நிலைமையிலேயே காணப்பட்டது.

போட்டி நிறைவில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகம் 19:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் சங்கானை இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சங்கானை பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)

# கோப்பாய்க் கோட்ட மட்ட பெரு விளையாட்டு முடிவுகள்

அச்சுவேலி,ஏப்.4

கோப்பாய்க் கல்விக்கோட்ட மட்டத்தில் உள்ள பாடசாலைகள் இடையே நடத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கரப்பந்தாட்டம்

*15 வயதுப் பிரிவு ஆண்கள்:* புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங்கால் மகாஜன வித்தி., ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.

*17 வயதுப் பிரிவு ஆண்கள்:* ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தி., புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

*19 வயதுப் பிரிவு ஆண்கள்:* புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

*15 வயதுப் பிரிவு பெண்கள்:* கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.

*17 வயதுப் பிரிவு பெண்கள்:* அச்சுவேலி மத்திய கல்லூரி, ஆவரங்கால் மகாஜன வித்தி., ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.

*19 வயதுப் பிரிவு பெண்கள்:* புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

மென்பந்து கிரிக்கெட்

*19 வயதுப் பிரிவு ஆண்கள்:* அச்சுவேலி மத்திய கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

வலைபந்தாட்டம்

*15 வயதுப் பிரிவு பெண்கள்:* அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

*17 வயதுப் பிரிவு பெண்கள்:* கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.

*19 வயதுப் பிரிவு பெண்கள்:* புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றத்தின் கலைநிலா அரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இசைநாடகப் பிரிவும், கலைத்தூது அழகியல் கல்லூரியும் இணைந்து நடத்தும் கலைநிலா அரங்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இரு நாள்களிலும் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள கலைநிலா அரங்கில் கலை நிகழ்வுகளாக முதலாம் நாளில் சங்கீத கலாவித்தகர் திருமதி சறோஜா ஜஸ்ரின் குழுவினரின் இசைக் கச்சேரியும், கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினரின் 'பூதத்தம்பி இசைநாடகத்தின் ஒரு பகுதியும் இடம்பெறும்.

இரண்டாம் நாளில் இசைக் கலைமாணி திருமதி சுகன்யா அரவிந்தன் குழுவினரின் இசைக் கச்சேரியும் கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினரின் அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகத்தின்ஒருபகுதியும் இடம்பெறவுள்ளன. (202)


சிவராம் மெடிகல்ஸ் $ சேஜரி
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி

M.B.B.S. வைத்தியர்கள் தினமும் பார்வையிடுகிறார்கள்.

* திங்கள் முதல் வெள்ளி வரை:
மதியம் 12.00- 1.30 மணிவரை மாலை 4.00- 6.00 வரை
* சனி, ஞாயிறு தினங்களில்:
காலை 11.00- 2.00 மணி வரை

ECG, இரத்த, சல பரிசோதனைகள் தினமும் காலை 8.30மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை செய்து கொள்ளலாம்.

நிர்வாகத்தினர்.

(72695)


சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான சர்வசித்து வருஷம் பங்குனித் திங்கள் 25ஆம் நாள் (07.04.2008) திங்கட்கிழமை நண்பகல் 12.33 மணிமுதல் பி.ப.01.55 மணிவரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும், கடகலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி ஞானசம்பந்தன் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**செந்தமிழ்செல்வன்**
அவர்களுக்கும்

திரு.திருமதி தெட்சணாமூர்த்தி தம்பதியரின் ஏக புதல்வி திருநிறை செல்வி
**கிருஷ்ணாஜினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு
**குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில்**
திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ஞானசம்பந்தன் குடும்பத்தினர்,
வளாக வீதி, திருநெல்வேலி.

திரு.திருமதி தெட்சணாமூர்த்தி குடும்பத்தினர்,
குப்பிளான், ஏழாலை.

(இரு வீட்டார் அழைப்பு)

(72246)




இருபாலை கிழக்கு திரு.திருமதி க.நித்தியராஜா - பத்மாவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் இருபாலை கிழக்கு சி.சி.தமிழ் கலவன் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவனும் பேராதனை பல்கலைக்கழக B.Sc. (ENG. FIRST CLASS HONORS)பட்டதாரியுமான **நித்தியராஜா மயூரன்** இன்று 04.04.2008 லண்டன் UNIVERSITY OF SURREY இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் M.Sc.(STRUCTURAL ENGINEERING WITH DISTINCTION) பட்டம் பெறுவதையிட்டு எம்பெருமான் நல்லூர்க் கந்தன் மற்றும் எமது குலதெய்வங்கள் அருளால் மென்மேலும் பட்டங்கள் பெற்று வாழ

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, தங்கை நிர்த்திகா, தம்பி செந்தூரன், பரிஸ் ரவி மாமா, சித்தப்பாமார், சித்திமார்கள், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், லண்டன் போல் சண்முகம் பப்பா குடும்பத்தினர்.

'சந்திரோதயம்',
இருபாலை கிழக்கு, கோப்பாய்.

(72504)

# கண்ணீர்த் துளிகள்...

31.03.2008 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த பிரபல சமூக சேவையாளர்

## அமரர் சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா

(ஓய்வுபெற்ற அதிபர், புங்குடுதீவு அ.மி.வித்தியாலயம்)



சிட்டெனப் பறந்து திரிந்த
இரத்தினப் பறவை- சிறகொடிந்து
வீழ்ந்த செய்தி கேட்டு
நெஞ்சு வெடித்தது
நெருங்கிய உறவு
நெடுந்தூரம் சென்று விட்டது போன்றதொரு
பெரும் துயரம் நெஞ்சை அடைத்தது

ஒன்றா இரண்டா- இல்லை
நாம் நினைத்துப் பார்க்கின்றோம்
நாட்டு நடப்பும் வீட்டு நடப்பும்
நகைச்சுவையோடு நாம் பேசி
மனம் விட்டுச் சிரித்து
மகிழ்ந்திருந்த பொழுதெல்லாம்
நேற்றுடன் முடிந்ததே!

நல்லதுக்கு காலமில்லை
நாமிழந்து நிற்கின்றோம் உம்மை
தேற்ற யாருமில்லை தேம்புகின்றோம்.

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மகாலிங்கம் சிவனேஸ்வரன் குடும்பம்**
(கனடா- நேசன்).
T.P.: 905 3023781, 416 4389060.

(72711)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தத்தின்போது இலங்கையில் பரவிய 'சல்வீனியா'வைப் போல் இப்போது குடாநாட்டில் பாதீனியம்!

பாதீனியம் என்றழைக்கப்படும் களை குடாநாட்டுப் பயிர்ச்செய்கைக்குப் பெரும் சவாலாக உள்ளது. கட்டுப்படுத்துவதற்குத் தீவிர முயற்சி தேவை.

யாழ்.குடாநாட்டுப் பகுதியில் காணப்படும் பாதீனியம் விவசாயத்திற்கும் பயிர் இனங்கள், விலங்குகள், மனிதன் ஆகிய சகல தரப்பினருக்கும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் உள்ளது.

நச்சுத்தன்மை வாய்ந்த இந்த விவசாயக் களையைக் கட்டுப்படுத்தும் தலையாய கடமை விவசாயிகளுக்கும் காணிச் சொந்தக்காரருக்கும் உரியதாகும். இது ஒரு சமூகக் கடமையாகக் கருதப்படுவதால் சமூகத்தில் உள்ள பொதுநிறுவனங்கள், தொண்டு அமைப்புகள், பொதுமக்கள் அனைவரினதும் கரிசனைக்கும் மேலான செயற்பாட்டுக்குமானதுமாகும்.



இதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் வழங்கி வருகிறது என அதன் பிரதிப்பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

## கம்மும் புல்லும்

பாதீனியம் குடாநாட்டுக்குப் புதியது. 1980களின் பிற்பகுதியில் இங்கு நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் தமது உணவுத் தேவைக்காக அங்கிருந்து வரவழைத்த கால்நடைகள் மூலமாக இங்கு பரவியுள்ளதாக நம்பப்படுகிறது. சமூகத்தில் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புக் கிடைக்காத பட்சத்தில், இரண்டாவது உலக யுத்தத்தில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 'சல்வீனியா'வைப் போல் இதை அழிப்பது சிரமமானதாக அமைந்துவிடக் கூடும்.

யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 46 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பரவியிருந்தமை அவதானிக்கப்பட்டு இருந்தது. இதை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் இக்களை படிப்படியாகப் பெருகி தற்பொழுது மொத்தம் 76.25 ஹெக்டேயர் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது.

### பிரதேச செயலர் பிரிவு ரீதியான பரம்பல்

உடுவில் 8.50 ஹெக்டேயர், தெல்லிப்பழை 7.75 ஹெக்டேயர், சங்கானை 3 ஹெக்டேயர், கரவெட்டி 3.25 ஹெக்டேயர், நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் தலா 50 (½) ஹெக்டேயர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவை பாதீனியம் ஒப்பீட்டு ரீதியில் செறிவாக ஆக்கிரமித்துள்ளது. இங்கு 49.25 ஹெக்டேயர் விஸ்தீரணத்தில் பரவலாகக் காணப்படுகிறது. வடமராட்சியில் பருத்தித்துறையில் 50 ஏக்கரில் உள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால் 38 கிராம அலுவலர் பிரிவுகளில் 76.25 ஹெக்டேயர் பாதீனியம் பரம்பியுள்ளது.

பாதீனியப் பரம்பலை அவதானிக்கும் ஆள் அல்லது நபர் (நபர் என்பது தனி ஒருவரையும் நிறுவனத்தையும் குறிக்கும்) ஒருவர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றுக்கு தகவல் தருவதற்கும் பாதீனியத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான சட்டக் கட்டுப்பாடுகளும் உள்ளன.

1991ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (ஆக்கச் சட்டம்) பாதீனியத்தை இனங்கண்ட நில உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், விவசாயப் பணிப்பாளர் அல்லது பிரதேச செயலருக்கு அறிவிப்பதுடன் அழிப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ளவேண்டுமென வற்புறுத்தும் ஏற்பாடுகளும் உள்ளன. தவறுமிடத்து நபர் ஒருவர் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டு தண்டனைக்கு ஆளாக்கப்பட இடமுண்டு. (அதாவது ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறை அல்லது ஒரு லட்சம் ரூபாவிற்கு மேற்படாத தண்டம்)

விவசாயத் திணைக்களத்திற்கு இது தொடர்பான (பாதீனியம்) ஆய்வுகளை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களம் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துதல் சம்பந்தமான தொழில்நுட்பத்தை விவசாயிகள், பொதுமக்கள் மத்தியில் பரம்பல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்கி வருகிறது. விழிப்புணர்வு கருத்தரங்குகள் சிரமதானம், பத்திரிகைச் செய்திகள், கையேடுகள் மூலம் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பிரதேச சபைகளும் பாதீனியக் களையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்படுத்தி வருகின்றன.

### தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கான கடமைகள்

தனிநபர் ஒருவருடைய விவசாய நிலத்தில் அல்லது வெறும் காணியில் அல்லது குடியிருப்பு நிலத்தில் பாதீனியம் காணப்பட்டால் அதை இல்லாதொழிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட நபருக்கும் குடும்பத்தவர்களுக்கும் உரியதாகும்.

விவசாய நிலத்திற்கு அண்மித்த வீதியில் அல்லது பொதுக்காணியில் அல்லது ஆள் இல்லாத அயல் காணிகளில் பாதீனியம் காணப்பட்டால் அந்த விவசாயியே அதற்கும் பொறுப்பு. அதை அவர் அகற்றுவதே பொருத்தமானது. அதனால் பாதிக்கப்படுவது அவரது பயிரும் அவரும் குடும்பமுமேயாகும்.

பொது இடங்களில் உள்ள பாதீனியத்தை அகற்றுவதில் பிரதேச சபைகள், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கங்கள், கமக்காரர் அமைப்புகள், கோயில் சபைகள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவை பொறுப்புடன் ஈடுபடவேண்டும். சில இடங்களில் இத்தகைய நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

## வளம்மிக்க பயிர்ச்செய்கை நிலங்களில் அது வேகமாகப் பரவி வருகின்றது

மல்லாகத்தில் பாதுகாப்புத் தரப்பினர் பாதீனியக் களையகற்றுவதை நேரடியாகக் காணமுடிந்தது. அதேநேரத்தில் தனியார் காணிகளில் மரவள்ளித் தோட்டத்தில் பாதீனியம் காணப்படுகிறது. பயிர்செய்யப் பண்படுத்தப்பட்ட நிலத்திற்கு அருகில் வீதிக்கும் விவசாயக் காணிக்கும் இடையில் 3 அடி அகலமான நீண்ட பகுதியில் பாதீனியம் வளர்ந்துள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

கரந்தன் விவசாய நிலங்களில் காணப்படும் பாதீனியத்தை அழிக்க விவசாயிகள் நடவடிக்கை மேற்கொண்டதாக அறியப்படவில்லை.

புத்தூர், உரும்பிராய் போதனாசிரியர் பிரிவுகளில் பயிர்நிலங்கள், பயிர்களின் இடையேயுள்ள களைகளை விவசாயிகள் கட்டுப்படுத்தத் தவறியமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகளும் பொது அமைப்புகளுமே கட்டுப்படுத்தவேண்டும்.

### பாதிப்புகள்

செய்கை பண்ணப்படும் பயிர் விளைச்சலில் 30% - 40% வீழ்ச்சியை பாதீனியம் ஏற்படுத்தும். பயிர் குறிகளில் இதன் மகரந்த மணிகள் வீழ்ந்தால் செய்கை பண்ணப்படும் பயிர்களில் கருக்கட்டல் தடைப்படும், பயிர் வளர்ச்சி மட்டுப்படும், கால்நடைகளுக்கு நோய் ஏற்படும், மனிதருக்கு தோல் ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புண்டு.

களை மற்றும் களை காணப்படும் பகுதி மண் என்பவற்றை வேறு இடங்களுக்கு மாற்றுதல் கூடாது. கைகளால் பிடுங்கி (கையுறை பாவிக்கவேண்டும்) அல்லது மண்வெட்டி போன்றவற்றால் வெட்டி காயவிட்டபின் அழிப்பது சிறப்பானது. பூப்பதற்கும் முன் அழித்து (எரித்து) விடவேண்டும்.

கிருமிநாசினி விசுறுவதன் மூலமும் களையை கட்டுப்படுத்தலாம். 'கிளைபோசேற்' அல்லது '2.4D' களை நாசினிகளில் ஒன்றைப் பாவிக்கவேண்டும்.

13.5 லீற்றர் நீர் கொள்ளும் தாங்கிக்கு 100 மில்லிலீற்றர் கிளை போசேற் அல்லது 40 மில்லிலீற்றர் 2.4D களைகொல்லியைக் கலந்து விசிறவேண்டும்.

பூத்து முதிர்வடைய முன் கிருமிநாசினியைப் பாவிப்பதே உகந்தது. முதிர்வின் பின் விசுறுவது போதிய பலனைக் கொடுக்காது. ஹிஸ்டோ போரஸ் எல் எனும் பாதீனியம் ஓராண்டு வயதுக் களையாகும். 50-158 சென்ரிமீற்றர் வரை வளரும். செவ்வந்திப் பூச்செடியின் இலைச் சாயலைக் கொண்டதாக இலை காணப்படும். முதிர்ந்த தாவரம் ஆயிரக் கணக்கில் விதைகளை உற்பத்தியாக்கும். பல ஆண்டுகளுக்கு உறங்கு நிலையில் இருக்கக் கூடியதாகையால் பூப்பதற்கு முன் அழித்துவிடுவதே சிறந்தது - என்றார் பணிப்பாளர் சிவகுமார்.

சந்திப்பு: பேரின்பநாயகம்

# புளியம்பழத்தை உரிய முறையில் பாதுகாத்தல்

புளியம்பழம் எமது நாட்டில் விசேடமாக உலர் வலயத்தில் அதிகளவில் காணப்படுகிறது. பெரும்பாலும் இது உணவுக்கான ஒரு சுவையூட்டியாகப் பயன்படும். புளிப்பான சுவையைக் கொண்டுள்ளது. மருத்துவக் குணவியல்பைக் கொண்டுள்ள புளியம்பழத்தைச் சதையாக நீண்டகாலம் வைத்துக்கொள்வதன் மூலம் சிறியளவில் ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கலாம். இதற்காக சிறியளவு மூலதனமே தேவைப்படுவதுடன் இதற்கான தொழில்நுட்பமும் மிக இலகுவானதாகும்.

### செய்கை முறை

இந்தத் தொழிலின் பிரதான மூலப்பொருளான புளியம்பழம் நன்றாகப் பழுத்திருப்பதுடன், கிருமிகளோ அல்லது பூஞ்சணமோ அற்ற நிலையில் இருத்தல் வேண்டும். இது அமிலம் கொண்டதாகவிருப்பதால் துருப்பிடிக்காத பாத்திரங்களைப் பாவித்தல் முக்கியமானதாகும். 3:1 என்ற விகிதத்தில் புளியம்பழம் மற்றும் நீரைக் கலந்து 5 நிமிடங்கள் வரை வெப்பமேற்றவும். பின்னர் கொட்டைகளை அகற்றி சதையைப் பெற்றுக்கொள்ளவும். கொட்டைகளை அகற்றும் கருவிகளையும் பயன்படுத்தலாம். சதையைக் கெட்டியாக்குவதற்காகத் துருப்பிடிக்காத பெரிய பாத்திரத்திலிட்டு, மறுபடியும் 10 நிமிடங்கள் வரை வெப்பமேற்றவும். இறுதியாக பாதுகாப்புத் திரவமாக (Preservative) பொட்டாசியம் மெட்ட சல்பேட்டை (Potassium meta Sulphate) கலக்கவேண்டும். பூஞ்சணம் பிடிப்பதைத் தவிர்ப்பதற்காக ஒரு கிலோ புளிக்கு 100மி.கிராம் பொட்டாசியம் மெட்ட சல்பேட்டை கலக்கவேண்டும். பின்னர் சுடுநீரில் கழுவிய பிளாஸ்டிக் கொள்கலனில் நிரப்பி, மூடியால் மூடவும். ஆறியதன் பின்னர் லேபல் (Label) ஒட்டவும்.

### தயாரிக்கும் படிமுறை

காய்ந்த புளியம்பழம் → சுத்தம் செய்தல் → நீரை சேர்த்தல் → சூடேற்றல் → கொட்டை அகற்றல் ↓

சதையைப் பெறுதல் → சதையைக் கெட்டியாக்க வெப்பமேற்றல் → வெப்பமேற்றலை நிறுத்தல் → நிரப்புதல்

பொட்டாசியம் மெரா சல்பேற்று (Potassium meta Sulphate) ↑ (வெப்பமேற்றலை நிறுத்தல்)

நிரப்புதல் ↓ லேபல் ஒட்டுதல் ↓ பொதியிடல்

தொகுப்பு: என்.ஜே.இரத்தினதயா,
உதவி ...
மாவட்டக் காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்தித் சபை, ...

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.4

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-29)

* * *

வடமராட்சி,ஏப்.4

புலோலி, மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்தப் பங்குனிக் குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட அபிஷேகம் இடம்பெறும். (202-236)

* * *

வலி.தென்மேற்கு,ஏப்.4

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கடந்த 28ஆம் திகதி முதல் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இங்கு ஆலய புனர்நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் வருடாந்த உற்சவ காலத்தில் தினமும் முற்பகல் 11 மணிக்கு அபிஷேகம், 12 மணிக்கு மதிய பூசை, பிற்பகல் 4 மணிக்கு பஜனை, 5 மணிக்கு மாலைப் பூசை என்பன நடைபெற்று வருகின்றன.

மாலையில் சமய சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் மாணவிகளின் பஜனை நிகழ்வுகள் தினமும் பிற்பகல் 4 மணிக்கு உற்சவ காலம் முடிவடையும் வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-135)

* * *

நல்லூர்,ஏப்.4

யாழ்ப்பாணம், அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்தப் பெருவிழா நாளை சனிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

புதுவருடத் தினமான 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-111)

# மக்கள் முகம்

பருத்தித்துறைச் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஞானசேகரம் சமூக சேவைத் திணைக்களத்தினால் மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தராகப் பதவி உயர்த்தப்பட்டு யாழ்.மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ★ ★

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக கே.முருகையா பொறுப்பேற்றுள்ளார்.

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா. அதிபர் கந்தையா மயில்வாகனம் ஆசிரியத் தொழிலில் பல்வேறு பதவி நிலைகளில் இருந்து இயல்பூக்கத்துடன் செயற்பட்டுத் திறமைமிக்க அதிபராகி இளைப்பாறியுள்ளார்.

அவர் கல்விப்பணியில் மாத்திரமல்லாது ஆன்மீகம், சமூகம், விளையாட்டுத் துறை என பலதுறையில் சேவையாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## Jaffna Education Centre
நாதன்ஸ் சினிமா முன்பாக [மேல்மாடியில்]

**Spoken English With Grammar**
**short hand typing**
''சிங்களம்''
ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

O/L Maths
English } Paper Classes

ஆரம்பம் : 05.04.2008
பெண்களுக்கு தங்குமிட வசதியும் உண்டு.
Director : Loganayahi



## கண்ணீர்க் காணிக்கை



எமது அன்புக்குரியவரும், முன்னாள் அதிபரும் சிறந்த சமயத சமூக சேவையாளருமான புங்குடுதீவின் தேசபிதா

**சுப்பிரமணியம் யோசேப் பூராசா**

அவர்கள் காலமான செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆற்றொணாக் கவலையும் அடைகின்றோம். எமது கிராம மக்களின் மேம்பாட்டிற்காக மெய்வருத்தம் பாராது அல்லும் பகலும் அயராது உழைத்து வீதிக்கு மெருகூட்டி ஊருக்கு ஒளியூட்ட ஓய்வின்றிப் பாடுபட்ட தேசபிதாவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர்தம் குடும்பத்தார் ஆறுதல் அடையவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (72709)

பிரிவால் துயருறும்:
கிராம அலுவலரும், கிராம மக்களும்.




## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### சபிண்டீகரணக் கிரியையும்
### ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர்
**சுப்பிரமணியம் நடராசா**
(இளைப்பாறிய இரசாயன தொழில்நுட்பவியலாளர்)

தோற்றம்
12 ★ 01★ 1928

மறைவு
05 ★ 03★ 2008



கடந்த மாசி மாதம் 22ஆம் நாள் 05.03.2008 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் இன்று (04.04.2008) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவன் வளவு,
மூளாய் கிழக்கு,
சுழிபுரம். (72710)

குடும்பத்தினர்.



## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும்



அமரர்
**பே.அ.மரியாம்பிள்ளை**

மண்ணில்
01.09.1930

விண்ணில்
05.03.2008

*"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரது முடிவு மகிழ்ச்சிக்கு உரியதாய் அமையும்; அவர்கள் இறக்கும் நாளில் ஆசி பெறுவார்கள்"*
*(சீராக் 1:13)*

எமது குடும்பத் தலைவனையும் பாசமுள்ள தந்தையையும் பிரியமான பேரனையும் நாம் இழந்து தவித்தவேளை நேரில் சமூகமளித்தும், தொலைபேசி, தொலைநகர்வு, கண்ணீர் அஞ்சலிகள், செபங்கள், திருப்பலிகள் மூலமாக எம்துயரைத் தம்துயராய்ப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறியும் தந்தையாரின் ஆன்ம சாந்திக்காய்ப் பிரார்த்தித்துக் கொண்ட அனைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் உற்றார், உறவினர்கள் எனது பாடசாலைச் சமூகத்தினர் (யாழ்.கரம்பொன் சண்முகநாத ம.வி.) அன்பர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், நாவாந்துறை, நவாலிப் பங்கு மக்கள் யாவர்க்கும் எமது நன்றியைக் கூறிக்கொள்வதோடு, அவரின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி இன்று (04.04.2008) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படுமென்பதையும் அறியத்தருகின்றோம்.

*"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு"*
*(திருபா 118:1)*

தகவல்:
அருட்சகோதரி மறிஸ்ரெலா
மரியாம்பிள்ளை (மகள்)
நல்லாயன் இல்லம்,
நாவாந்துறை.

பிரிவின் துயரில்:
அன்பு மனைவி, பாசமுள்ள மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பிரியமான அக்கா, அண்ணா மற்றும் உறவினர்கள்.
(72702)



## மருந்தாளர் தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நாவலர் வீதியில் இயங்கிவரும் ஆங்கில மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை. சான்றிதழுடன் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சந்திக்க நேரில் வரவும்.

**221, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (72712)



## வாடகைக்கு

வீடு வாடகைக்கு உண்டு. திருநெல்வேலி தபால்பெட்டி சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: *758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.0776621660 (72712)


## இனந்தெரியாதோர் தாக்கி ஒருவர் காயம்

குடத்தனை,ஏப்.4

வீட்டுக்குள் புகுந்த கோஷ்டியினரின் கொட்டன் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ஏழாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் பிறேமராஜ் (வயது 35) என்பவரே தலையிலும் காலிலும் அடிபட்டு படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கறுப்புத் துணியால் முகத்தைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த 3பேரைக் கொண்ட குழுவே இவரை தாக்கியதாகக் கூறப்படுகின்றது. (202-78)

## சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''சொல்வேந்தர்'' பொன் சுகந்தன் ''இதிகாசங்கள்'' என்னும் பொரு ளில் சொற்பொழி வாற்றுவார்.

அதனை அடுத்து மகேஸ்வர பூசையும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

## மணல் விநியோகம்

குடத்தனை,ஏப்.4

குடத்தனை பகுதியில் மணல் விநியோகம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

அண்மையில் தொடர்ந்து பெய்த மழையினால் மணல் விநியோகம் சுமார் இரண்டு கிழமையாக நிறுத்தப்பட்டு இருந்தது.

தற்பொழுது கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் விநியோகம் ஆரம்பமாகியுள்ளது. (202-78)

## வலி.தென்மேற்கில் மேலும் 16 பேருக்கு உதவிக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,ஏப்.4

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு பெறுவதற்கு புதிதாக 16 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

தமக்கு இந்த உதவிப் பணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று முன்னர் விண்ணப்பித்திருந்தவர்களான மேற்படி 16 பேருக்கும் இம்மாதம் முதல் இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.(202-135)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவைக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் இக் கூட்டம் நடைபெற உள்ளது. (202)

## தேங்காய் உடைக்கும் தத்துவம்

தேங்காயை உரிக்காமல் அப்படியே நிவேதனம் செய்வதில்லை. மட்டையையும் நாரையும் நீக்கிவிட்டு இறைவனுக்குப் படைக்கின்றோம். தேங்காயை உடைத்து உள்ளே இருக்கும் நீரை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றோம். தேங்காய்க்குள் இருக்கும் நீர் நமது வினைகளைக் குறிப்பிடுகிறது. தேங்காயிலிருந்து நீரை வெளியேற்றுவது நம்மைத் தூய்மைப்படுத்துவதை உணர்த்துகிறது. நாம் நமது இதயத்திலுள்ள ஆசாபாசங்களை நீக்கிவிட்டு மனதில் உள்ள எல்லாச் சிந்தனைகளையும் வடித்துவிட்டு இறைவனுக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். உள்ளே நீர் இருக்கும் வரையில் தேங்காய் மீண்டும் தென்னையாக வளர வாய்ப்பு இருக்கிறது. தேங்காய் நீரின்றி முற்றிவிட்டால், அதன் பிறகு அது நட்டாலும் வளராது. நாம் மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைய முற்பட வேண்டும் என்பதையே தேங்காய் நமக்குத் தத்துவ ரீதியாக விளக்குகிறது. தேங்காய் உடைப்பது குறித்து வேறுசில தத்துவ விளக்கங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:

தேங்காய் என்பது நமது மனித உடலைப் பிரதிபலிக்கிறது. வெளியே பளபளப்பான மேல்தோலையும், உள்ளே பிசிறு பிடித்த நார்ப்பகுதியையும் தேங்காய் கொண்டிருக்கிறது. அத்தகைய தேங்காய் நாரை உரித்த பிறகு அதைக் கோயிலுக்கு நாம் எடுத்துச் செல்கிறோம்.

இன்னொரு தத்துவ விளக்கமும் உள்ளது. தேங்காயின் மேல் கடினமான ஓடும், உள்ளே இனிய இளநீரும் இருக்கிறது. உருண்டையான புறஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. இரண்டும் கோள வடிவம் உடையவை. இது உலக மாயையைக் குறிப்பது. உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கிறது. இளநீர் பரமாத்மாவால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்திருக்கிறது. ஜீவாத்மா மாயையின் காரணமாக பரமாத்மாவை உணராமல் பரமானந்த பிராப்தியும் பெயராமல் நிற்கிறது. அதுபோல வெள்ளைப் பகுதியையும், இளநீரையும் காணமுடியாமல் ஓடு மறைக்கிறது. இறைவன் சந்நிதியில் மாயையை அகற்றி ஒளிமயமான உருவத்தைக் காட்டி, பரமானந்தப் பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலை இது காட்டுகிறது.

இவ்வளவு உட்கருத்துக்கள் இருப்பதால் நமது பெரியோர்கள் தேங்காயை இறைவழிபாட்டில் முக்கியமாக வைத்திருக்கிறார்கள்.

நன்றி ஞானச்சுடர்


## Callina for Tender - Teaching Hospital. Jaffna.
### *Tiling* to *OPD MAIN* HALL

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for tiling to OPD main hall, TH, Jaffna up to 10.00am on 16.04.2008 Tender forms may be collected from Director, TH, Jaffna up to *08.04.2008* on payment of non refundable deposit of Rs.1000/-
02. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
03. Tender forms are issued only to contractors who have valid registration in Grade M9 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).
04. Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 16.04.2008.
05. Tender Document may be inspected free of charge at the Resident Engineers Office, CECB, Jaffna.
06. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.



## 13ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1903 ★ மறைவு 29.03.1995





தோற்றம் 06.06.1908 ★ மறைவு 05.04.1995

அமரர்
**கந்தையா குமரேசு**

திருமதி
**தங்கம்மா குமரேசு**

ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
இவ்வுலகை விட்டு நீர் சென்றுவிட்டீர்
நாளும் உம்மை நினைத்தே நாமிங்குநெஞ்சுருகித் தவிக்கின்றோம்.

இடைக்காடு மேற்கு,
வருத்தலைத்துறை.

குடும்பத்தினர்,
குமரேஸ் வாணிப நிலையம்.
(சி/55408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர்களுக்குத் தெற்கு விரிக்கும் வலைப் பொறியே கிழக்குத் தேர்தல்

ஈழத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாகத் தமது பூர்வீகத் தாயகப் பூமியில் ஒருங்கிணைந்து வாழ்வதற்கும் தமது இனத்தின் தனித்துவத்தை அடையாளப்படுத்தி நிற்பதற்கும் அவசியமான அடித்தளங்களைத் தகர்ப்பதன் மூலம், இலங்கைத் தீவில் தமிழினத்தின் பாரம்பரிய இனத்துவ உரிமையைச் சிதைத்து, இன ஒடுக்குமுறையை வெற்றிகரமாக முன்னெடுப்பதே பௌத்த, சிங்களப் [illegible]வாதத்தின் ஒரே வெறியாகவும், தீவிரமாகவும் இருந்[illegible]ருகின்றது.

இலங்கைத் தீவின் பெரும்பான்மை இனம் என்ற ஒரேயொரு வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்துக்கொண்டு, தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி, ஒடுக்கி, சின்னாபின்னப்படுத்தி, சிங்கள மயமாக்கும் பேரினவாதப் பூதத்தின் இன அட்டூழியம் எல்லை கடந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனையே தனது தற்போதைய அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தீவிர சிங்களத் தேசியவாதத்தை மட்டும் இலங்கைத் தீவில் நிலைநிறுத்த வேண்டும் என்ற வெறியோடு, அதற்காக ஏனைய சிறுபான்மை இனங்களை சகல வழிகளிலும் அடக்கி, ஒடுக்கி, ஆட்சிப்படுத்தி வந்த சிங்களத் தலைவர்களின் வரிசையில் மிக மோசமானவராகத் தன்னை அடையாளப்படுத்தி நிற்கின்றார் தற்போதைய ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்பதை தமிழ்க் கூட்டமைப்பு கோடி காட்டியிருக்கின்றது.

அரசியல் ரீதியாகவும் சரி -
இராணுவ ரீதியாகவும் சரி -
மனிதாபிமான ரீதியாகவும் சரி -

எல்லா விடயங்களைக் கையாள்வதிலும் தீவிர சிங்களத் தேசியவாதத்தைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கமாகக் கொண்டு, அதனடிப்படையிலேயே காய்களை நகர்த்தி செயற்பட்டு வந்திருக்கிறார் - செயற்பட்டு வருகிறார் - அவர் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

பெரும்பான்மையாகத் தமிழர்களின் மொழிவாரிப் பிரதேசமாகவும், தொடர்ச்சியான தாயகமாகவும், பாரம்பரிய பூமியாகவும் வடக்கு - கிழக்கு விளங்குகின்றது என்ற உண்மை 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் சிங்களத் தலைமைகளாலும் எழுத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அடுத்தடுத்து வந்த சிங்களத்தின் நான்கு ஜனாதிபதிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வந்த இந்த யதார்த்தம், மஹிந்த ராஜபக்ஷவின் சிங்களத் தேசிய இனவாத சகாக்களால் இலங்கையின் நீதி முறைமையின் கீழ் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

தமிழர்கள் மீது தென்னிலங்கைச் சிங்களத்தினால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதும் இரும்புச் சட்டச் சிறைபோன்று அசைக்கவோ, நகர்த்தவோ, நெகிழ்த்தவோ முடியாத இறுக்கமான கட்டமைப்பைக் கொண்டதுமான இலங்கையின் அரசமைப்பின் ஏற்பாடுகளின் கீழ், தமிழர் தாயகம் இரண்டாகப் பிளக்கப்பட்டது. இருபது வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு, நீடிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பில் ஏதோ சட்ட நுட்பத் தவறு - நடைமுறைப்பிழை - இருப்பதாகச் சுட்டிக்காட்டி அந்த இணைப்பை ரத்துச் செய்யும் உயர்நீதிமன்ற உத்தரவை சிங்களத் தேசியவாதக் கட்சியான ஜே.வி.பியினால் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது.

சரித்திர ரீதியாகக் கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களினால் இந்த வழக்கில் தலையிட்டுத் தங்கள் பக்கத்து நியாயத்தை முழுமையாகவும், நற்பயன் பெறக்கூடிய வகையிலும் முன்வைக்க முடியாது போயிற்று. அதற்கான வாய்ப்பை அவர்கள் கோரியும் நீதிமன்றின் - சட்டத்தின் - கதவுகள் அவர்களுக்கு அடைக்கப்பட்டுவிட்டன.

இருபது ஆண்டுகால நியாயத்தை ஒரு நொடியில் செல்லாததாக்கிய விவகாரத்தை சட்ட ரீதியாக மீண்டும் சரிசெய்வதற்கான வாய்ப்பும், அதிகாரமும், நாடாளுமன்ற ஆதரவும் இருந்தும்கூட முழு சிங்களத் தேசிய வாதத்தில் ஊறித் திளைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது ஆட்சிப் பீடத்தினரும் அந்த வாய்ப்பைக் கவனத்தில் எடுக்கக்கூட இடமளிக்காமல் நிராகரித்து விட்டனர்.

தமிழினத்தின் தேசிய ஐக்கியத்தை நிலைகுலையச் செய்து, நிர்மூலமாக்குவதன் மூலம் மட்டுமே சிங்கள ஆதிக்கத்தை இலங்கைத் தீவில் நிலைநிறுத்தலாம் என்று கங்கணம் கட்டி நிற்கும் தென்னிலங்கை, தமிழினத்தின் ஐக்கி யத்தைச் சிதைப்பதற்காகத் தமிழர்களிடையே பிரதேச வாதத்தைக் கிளப்பும் புல்லுருவிகளை வசமாகப் பயன்படுத்துகின்றது.

தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்கும் கொழும்பின் சதித் திட்டத்துக்குத் தாமும் உடந்தை என்பதைப் புரிந்துகொண்டும் இந்தப் புல்லுருவிச் சக்திகள் கோடரிக் காம்பாகக் கொழும்புக்குத் துணைபோவது தமிழினத்தைப் பீடித்த பேரவலம் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கைத் தீவு பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்று, பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், இந்த ஆறு தசாப்த காலத்தில் ஆட்சியில் இருந்த பல்வேறு அரசுகளினால் இழைக்கப்பட்ட அளவற்ற தீங்குகளுடனும், சேதங்களுடனும், அநீதிகளுடனும் ஒப்பிட்டால் கடந்த இரண்டு ஆண்டு களில் அரசியல், நிர்வாக, அதிகார, இராணுவ நடவடிக்கைகள் மூலம் இந்த அரசு புரிந்த அட்டூழியங்களும் நாசங்களும் எல்லை கடந்தவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுவது முற்றிலும் உண்மையே; சரியானதே.

அத்தகைய மோசமான செயல்களின் உச்சமான கபடத் திட்டமாகவே - தமிழர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்த பிரதேசத்தைக் கபளீகரம் செய்து, அதனை சிங்கள மயப்படுத்தி, தமிழரின் வாழ்வியல் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் பயங்கரமான பொறியாக விரிக்கப்படும் இந்த மாகாண சபைத் தேர்தல். தமிழர்களின் இத்தகைய உள்ளக் கிடக்கையான கருத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் பிரதிபலித்திருக்கின்றது.

# புங்குடுதீவுக்கான மின்விநியோகம் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

புங்குடுதீவுப் பகுதிக்கான இலங்கை மின்சார சபையின் மின்விநியோகம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

அன்று பிற்பகல் 2.30மணிக்கு மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படும். யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மின்விநியோகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இந்த மின்விநியோகத்துக்கென 250 கிலோவாற்ஸ் சக்தி கொண்ட மின் பிறப்பாக்கியொன்றை மின்சார சபை அங்கு பொருத்தியுள்ளது. அதன் மூலம் ஒவ்வொரு நாளும் காலை 5 மணி முதல் 7 மணிவரையும் மாலை 6.30 மணிமுதல் இரவு 10.30 மணி வரையும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின்சாரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்த 60 பேரில் 40 பேருக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய 20 பேருக்கு விரைவில் இணைப்புகள் வழங்கப்படும் எனவும் இதுவரை விண்ணப்பிக்காதோர் விரைவில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50)

# நூலகத் தொண்டர் குழு

வலி.தென்மேற்கு,ஏப்.4

வலி.தென்மேற்குப் பிரதேச சபைப் பிரிவைச் சேர்ந்த 4 உப அலுவலகங்களிலும் நூலக தொண்டர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம், ஆனைக்கோட்டையிலுள்ள மானிப்பாய் கிராம உப அலுவலகம் மற்றும் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனியாக நூலக தொண்டர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நூலகசேவையையும் வாசிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்துவதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

# பெரியவிளானில் வெல்ல உற்பத்தி நிலையம்

வலி.தென்மேற்கு, ஏப்.4

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரியவிளானில் பனை வெல்லம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ''கமநெகும'' திட்டத்தின்கீழ் இத்தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு 20 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இந்த பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலையில் தரமான பனை வெல்லம் தயாரித்து சகாய விலையில் சந்தைப்படுத்தமுடியும் என்றும் பலருக்கு வேலைவாய்ப்புகள் வழங்க முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (203-135)

# ''பிரபாகரன்'' திரைப்படத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

சென்னை,ஏப்.4

தமிழர்களை அவமதிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட ''பிரபாகரன்'' சிங்களத் திரைப்படத்திற்கு சென்னை மாநகர முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாளவன் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொல்.திருமாளவனின் சட்டவாளர்களான இளமாறன், ஆர்வலன் ஆகியோர் சார்பில் மூத்த சட்டவாளர் ஆர். எல்.சுரேஷ் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்ததாவது:

இத்திரைப்படம் மொத்த தமிழினத்தையும் அவமானப்படுத்தக்கூடியது. நோர்வேயின் சமாதான முயற்சிகளை எதிர்க்கின்ற காட்சிகளும் இத்திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் இரு வேறு இனங்களுக்கிடையே ஆழமான விரிசல்களையும் மோதல்களையும் இத்திரைப்படம் மேலும் ஏற்படுத்தும் - என்றார் மூத்த சட்டவாளர் சுரேஸ்.

இதனைக் கேட்ட நீதிபதி, சென்னை ஜெமினி வண்ணக் கலையகத்தில் இருந்து தயாரிப்பாளர், இயக்குநர் உட்பட யாரிடமும் பிரபாகரன் திரைப்படத்தின் சுருள்களையோ பிரதிகளையோ இரு வாரத்திற்குள் எவரிடம் கொடுக்கக்கூடாது என உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு நீதிபதியால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (202)

# இளம் சமுதாய தலைவர்கள் விருது

யாழ்ப்பாணம்,ஏப்.4

இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்திலிருந்து பண்டாரநாயக்கா கல்வி நிலையம் இளைஞர்களை வலுவூட்டும் பிரிவின் கீழ் 'இளம் சமுதாய தலைவர்கள் விருது'களை அறிமுகப்படுத்தவுள்ளது.

சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க சேவையையும் தலைமைத்துவத்தையும் வழங்கிய இளம் தலைவர்களை அடையாளப்படுத்தி, அவர்களின் சமூகத்திற்கான பணிகளை ஊக்கப்படுத்தும் முகமாகவும் அவர்களைக் கௌரவிக்கும் முகாமாகவும் தேசிய நிகழ்வு நடத்தப்படும். அந்நிகழ்வில் வைத்தே விருதுகள் வழங்கப்படவுள்ளன.

15 பிரிவுகளாக விருது பெறுபவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து இவ் விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சகல பிரதேச செயலகங்கள்/ உதவி அரச அதிபர் அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார். (202)

# சடலத்தை இனங்காணுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.4

பண்டத்தரிப்பு பாடசாலைக்குப் பின் புறமாக உள்ள பற்றைக்குள் இருந்து 65 வயது தொடக்கம் 70 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டு நீதிபதியின் உத்தரவின் பேரில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மெல்லிய உருவமும் பொதுநிறமும் உடைய குறிப்பிட்ட சடலத்தில் கறுப்பு நிற ரீசேட் மட்டும் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

இந்தச் சடலத்தை இனங்காண உதவுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (203)

# காரைநகர் உ.அ.அ.பிரிவில் ஆள்பதிவுத் திணைக்கள கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆள்பதிவுத் திணைக்களக் கிளை அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினராக ஆள்பதிவுத் திணைக்கள பதவிநிலை உதவியாளர் திருமதி ரி.ஸ்கந்தராஜாவும் கலந்துகொள்வர். (202-250)

# விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு விசேடமான கணனிப் பயிற்சி

யாழ்.பிராந்திய சமூக நலத்துறைத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.பிராந்திய சமூக நலத்துறைத் திணைக்களத்தினர் யாழ்.மாவட்டத்தில் உயர்கல்வி வரும் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு விசேடமான கணனிப் பயிற்சி நெறியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் யாழ்.சமூக நலத்துறைத் திணைக்களம் இந்த ஏற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடரும் பட்டதாரி மாணவர்கள் உட்பட 15 மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தியாவில் விசேட கணனிப் பயிற்சி பெற்ற, சமூக நலத் தறைத் திணைக்களத்தில் தற்போது கடமையாற்றிவரும் பட்டதாரி அலுவலர் ஒருவரும் இந்தப் பயிற்சியை வழங்கும் ஆளணியில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6 மாதம்(வார இறுதி நாள்களில்) தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ள இந்தப் பயிற்சிநெறிக்குத் தேவையான விசேட கணனிகள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பண்ணையில் உள்ள உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இந்த மாத நடுப்பகுதியில் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. (203-302)

# தபால் திணைக்களம் நவீனமயப்படுத்தப்படும் தொலைத்தொடர்புகள் அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.4

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற விதத்தில் தபால் திணைக்களம் நவீனமயப்படுத்தப்படும். இதற்கான ஆலோசனைகளை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதான தபால் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களம் தற்போது நஷ்டத்திலேயே இயங்குகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம் தபால் திணைக்களத்திற்கு 2800 மில்லியன் ரூபா நஷ்டமேற்பட்டிருக்கிறது. இவ்வாறு தபால் திணைக்களத்துக்கு நஷ்டமேற்பட இடமளிக்கமுடியாது. தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்தாததே இதற்குக் காரணமென நான் நினைக்கின்றேன். எனவே தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்தி அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதே எனது நோக்கமாகும்.

தபால் திணைக்களத்தை தனியார் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு அறவே கிடையாது. இதற்கு நானும் உடன்படமாட்டேன் - என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (202)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 23 | 05.04.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: சதுர்த்தசி | மு.ப. 11.38 |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி |
| | பி.இ.11.19வரை |

அமாவாசை விரதம்

| | |
|---|---|
| சுபநேரம் : | 03.08 - 04.38 |
| ராகுகாலம் : | 09.08 - 10.38 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் என்றுமே கல்வியின் சிகரம் போல் விளங்குவது

**விக்னா கல்வி நிறுவனம்**
**இரு இடங்களிலும்**

**தலைமையகம்** 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரிவு 2
**கிளை நிறுவனம்** 417, கே.கே.எஸ்.வீதி, யாழ்/இந்துக் கல்லூரி அருகில்.

**O/L DAY CLASS (8.30- 2.30)**

**ஆரம்பம்: 07.04.2008 (8.30)**

Mat. திரு. விக்கி, திரு. ரூபன்
Eng. திரு. விஸ்வநாதன்
Soci. திரு. பார்த்தீபன்
Com. திரு. கம்ஷன்
Sci. திரு. தேவா
Tam. திரு. விஜய்
Reli. திரு.N.T. தரன், திரு.ஆனந்தராஜ்
Geo. திரு.ஆனந்தராஜ்

* எமது நிறுவனத்திற்கு துவிச்சக்கரவண்டியில் வருபவர்கள் சிராம்பியடி ஒழுங்கையால் வரவும்.
* பஸ்ஸால் வருபவர்கள் ஸ்ரான்லி வீதியால் நடந்து வரவும்
* பிரிவு 3 மிக விரைவில்
* இம்முறை பிரிவு 6 மட்டுமே

(சி/552102)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளர்
உயர்திரு.
**வைத்திலிங்கம் வைத்தியகுமார்**
அவர்கள் அதிவிசேட சிறப்புத்தரம் (Supra Grade) பெற்று வடமாகாண கல்வி அமைச்சில் நிர்வாக உத்தியோகத்தராக பதவி உயர்வு பெறுவதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பீடாதிபதி, உபபீடாதிபதிகள், கல்வியியலாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள்,
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(சி/552120)

## ஆறுதல் கூறுபவர் யார்?



யாழ் . வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்
**அமரர். த. பஞ்சலிங்கம்**

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தில் அச்சாணியாய் கால் நூற்றாண்டுக்கு மேல் திகழ்ந்தாய். நட்புக்கும் மதிப்புக்கும் முன்மாதிரியாய் வாழ்ந்து காட்டினாய். "உன் மறைவு காலத்தால் முந்தியது. அனைவரும் கலங்கி நிற்கின்றனர். யாருக்கு யார் தேறுதலும் ஆறுதலும் கூறுவது.

430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம்

## ஓராண்டு நினைவஞ்சலி




# அமரர் ஜெ. ராதா

**அன்னையின் மடியில்: 26.07.1974** **இறைவன் அடியில்: 17.03.2007**

என் அன்புச் செல்வம் ராதா என்னை விட்டு எங்கே அம்மா போனாய்
ஆண்டு ஒன்று ஆகிவிட்டதம்மா உன்னைப் பெற்ற வயிறு கோதிக்குதம்மா
நான் என்ன பாவம் செய்தேனம்மா நீ உன் பிள்ளைகளிடம் போய் விட்டாய்
ஆனால் எனக்குப் பெற்ற பிள்ளையுமில்லை பேரப்பிள்ளைகளுமில்லை
நான் பட்டமரம் போல் இருக்கிறேன் அம்மா.

உன் ஆத்மா சாந்தியடைய கடவுளை
வேண்டி நிற்கிறேன்.

கோயில் சந்தை வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
(72727)
**உன் அம்மா இந்திராணி குடும்பத்தினர்.**

## தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளை தரமுயர்வு

யாழ்ப்பாணம், ஏப்.4

மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்று வங்கியின் முகாமையாளர் ப.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பித்து 5வருட பூர்த்தி விழா கடந்த வாரம் இடம்பெற்றது.

குறித்த 5வருட காலப்பகுதியில் எமது கிளை அலுவலக அதிகாரிகளால் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவையை முன்னிட்டே 107ஆவது கிளையான இந்த வங்கி ''டி'' தரத்தில் இருந்து ''சி'' தரத்திற்கு உயர்த்தப் பட்டுள்ளது. (203-95)

## நவாலி மகாவித்தியாலயத்தில் கலைப்பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.4

நவாலி மகாவித்தியாலயத்தில் விரைவில் உயர்தர கலை வகுப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது.

வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஆவணங்களை மாகாண கல்விப் பணிப் பாளர் ஊடாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் நவாலி மகாவித்தியாலயம் உயர்தர கலை வகுப்பினைக் கொண்ட பாடசாலையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-95)

## பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலாளர் ஊடாக ஆறு மாத காலத்திற்கான மின்னிணைப்பு, கணனி வன்பொருள் திருத்தம் ஆகிய பயிற்சிநெறிகளும் ஒரு மாதத்திற்கான பற்றிக்பிறின்ரிங் பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் உரிய கிராம சேவையாளர் ஊடாக (கரவெட்டிபிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவுகள்) தத்தமது சுயவிவரக்கோவையினை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலாளர், கரவெட்டி என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். (203)

## நூல் சேகரிப்பு வாரம் ஞாயிறு தொடக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.4

வல்வெட்டித்துறை நகரசபை பொது நூலகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான காலப் பகுதியை நூல் சேகரிப்புவாரமாக அனுஷ்டிக்கவுள்ளது.

நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் நூலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் கே.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 23 ஆம் திகதி நூலகத்தில் அனைத்துலக புத்தகதினம் கொண்டாடப்படவுள்ளதாகவும் நூலக அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது. (203-218)



## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந் திருவிழா- 2008

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 05.04.2008 (சனி) ந.ப.12.00 மணி |
| சப்பரம் | - 12.04.2008 (சனி) மாலை 6.00 மணி |
| தேர் | - 13.04.2008 (ஞாயிறு) காலை 9.00 மணி |
| தீர்த்தம் | - 14.04.2008 (திங்கள்) காலை 9.00 |

தினமும் பகல் திருவிழா நிறைவுபெற்ற பின்னர் மு.ப.11.00 மணிக்கு சர்வதேச இந்துமத குமார் ஒன்றியத்தினூடாக சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

**கோயில் நிர்வாகத்தினர்.**

(சி/552116)

விளம்பர அனுசரணை: நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்
2G. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:2225644

வசீகர தோற்றத்திற்கு
**சந்தனாலேப**




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை,
[illegible]

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவர் அ.சிவபாதசுந்தரம் அவர்களின் அன்புத் தந்தை **வி.ஆறுமுகம்** அவர்கள் 31.03.2008 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

(சி/552118)

**கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது தாவரவியல் துறையில் கடமையாற்றும் ஏழாலையைச் சேர்ந்த **இ.செல்வரத்தினம்** அவர்களின் அன்புத் தாய்
**அமரர் இராமலிங்கம் தங்கம்மா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(72730)

ஊழியர்கள் தாவரவியல் துறை,
**யாழ்.பல்கலைக்கழகம்**

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் அ.மி.பாடசாலை அதிபரும் சமூக சேவையாளருமாகிய
**சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா**
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரது மறைவினால் துன்பப்படும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு புனித
பிரான்சீஸ் சவேரியார் ஆலயம்
பங்குத் தந்தையும் பங்கு மக்களும், புங்குடுதீவு.

(72718)

Sri Lanka Insurance

## பதவி வெற்றிடம்

இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பகுதி நேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ காப்புறுதி ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

G.C.E. O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்ற 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடையோர் 05.04.2008ஆம் திகதி காலை 9 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்;**
**வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**
T.P.: 021 2222023, 011 2357566

(72720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியராகவேண்டும் என்பது யாழ்.இந்து நிருஜனின் விருப்பம்



யாழ்ப்பாணம்,ஏப்.4

ஜி.சி.ஈ உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்து வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஜி.சி.ஈ சாதரணதரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் தமிழ் மொழி மூலம் இரண்டாம் இடத்தைப்பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் குகானந்தன் நிருஜன் இப்படி தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

உதயனுக்கு நேற்று வழங்கிய பேட்டியில் அவர் கூறியதாவது:-

எனது கல்விக்கு கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் அளித்த உற்சாகமும் உந்துதலுமே நல்ல பெறுபேறை அடைவதற்கு வழிவகுத்தன.

எனது தந்தையார் குவைத்தில் பொறியியலாளராகப் பணியாற்றுகிறார். எனது கல்வியில் அம்மா மிகவும் அக்கறை கொண்டிருந்தார்.

எனது ஆரம்பக்கல்வியை தெஹிவளை இந்துக் கல்லூரியிலும் பின் இரத்மலானை இந்துக் கல்லூரியிலும் பயின்றேன்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபின் யாழ்.இந்துக் கல்லூரியில் இணைந்துகொண்டேன்.

ஆங்கில இலக்கியம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் என்பவற்றை விரும்பிக் கற்றேன். ஜி.சி.ஈ சாதாரணதரம் வரை தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதே எனது கருத்து. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அப்படித்தான் நான் நினைக்கிறேன். அதனால்தான் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லவில்லை.

ஆனால் உயர்தரப்பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்கு தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் தேவை உண்டு எனலாம்.

பரீட்சை எழுதியபோது இது போன்ற ஒரு பெறுபேறு கிடைக்கும் என்று நினைக்கவில்லை. ஆனால் சிறப்பான சித்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது - இப்படி நிருஜன் கூறினார். (அ-2-111)

# பெற்றோர் படிக்குமாறு நெருக்குதல் தரவில்லை புரிந்துணர்வுடன் ஒத்துழைத்தனர்

## பொறியியலாளராக விரும்பும் திருத்தணிகன்



யாழ்ப்பாணம்,ஏப்.4

ஜி.சி.ஈ உயர்தரத்தில் கணிதபாடத்தை கற்று ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஜி.சி.ஈ சாதாரண தரப் பரிட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழிமூலம் தோற்றி மூன்றாம் இடத்தைப்பெற்ற மாணவன் நரேந்திரன் திருத்தணிகன் இப்படி தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

உதயனுக்கு நேற்று வழங்கிய பேட்டியில் அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணம், கலட்டி அம்மன் கோவிலடியைச்சேர்ந்த திருத்தணிகன் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கல்விதான் இங்குள்ள மக்களின் முதன்மையான சொத்து. அதனை பலவேறு இடையூறுகளின் மத்தியிலும் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனையே என்னிடத்தில் முதன்மையாக இருந்தது.

நான் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையிலும் இந்துக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தேன். அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிநடத்தல்களை உள்வாங்கியதுடன் அவர்கள் கல்வி தொடர்பாக மேற்கொள்ளும் அறிவுரைகள் அனைத்தையும் அவதானத்துடன் செவிமடுத்தேன். அவற்றை இயன்றவரைக் கைக்கொண்டேன்.

எனது பெற்றோர்கள் 'படி,படி' என்று எனக்கு நெருக்குதல் - 'அரிகண்டம்' - தராது புரிந்துணர்வுடன் ஒத்துழைத்தனர். நண்பர்கள் எனக்கு மிகவும் கூடுதலாக உதவினார்கள். எங்களுக்கிடையே எல்லோருமே நன்றாகப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது. போட்டியாகவும் அதேவேளை ஒருவர் மீது ஒருவர் அக்கறையுடனும் கற்றலில் ஈடுபட்டோம்.

நான் ஆண்டு ஆறு தொடக்கம் தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று பயின்றேன். அதனால் பாடங்களை நன்றாகக் கிரகித்துக் கொள்ளமுடிந்தது. எனது சகோதரியும் எனது கல்விக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்.

கணிதத் துறையில் வலய மட்டப் போட்டிகளில் சான்றிதழ்கள் பெற்றுள்ளேன்.

எனக்கு விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வமுண்டு. 7ஆம் ஆண்டு படிக்கும் போது கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேன். பாடசாலை மட்டப் போட்டிகளில் எமது கல்லூரி அணிக்காக விளையாடினேன். கொழும்பு மற்றும் மன்னாருக்குச் சென்று எமது கல்லூரி அணிக்காக விளையாடியுள்ளேன். - இப்படி அவர் கூறினார். (அ-2-111)

# ஜி.சி.ஈ. பரீட்சையில் குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் கல்லூரி முன்னிலை வகிக்கின்றது.

விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று நண்பகலுக்குப் பின்னர் சில பாடசாலைக்கு கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்டன.

ஏனைய பாடசாலைகள் தமது முடிவு களை இன்று தத்தமது வலயங்களில் பெற் றுக்கொள்ளலாம் என்று கல்வித் திணைக் கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன் கொண்டு கிடைத்த பாடசாலை களில் 10'ஏ' சித்தி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**வேம்படி மகளிர்**

அனற் நிசாந்தா அன்ரன் யோகராஜா, ஹம்சத்வனி குணரட்ணம், பகீரதி அருணகிரிநாதன், ரஜித்தா சாந்தராஜா, சுமங்கலி சிவகுமாரன், தாரணி சுந்தரம், மைத்திரேயி பரமேஸ்வரன், கௌசிகா தாமோதரம்பிள்ளை, சிரோமி அருணாசலம், சுகன்யா சிவசுப்பிரமணியம், யசோதரா சண்முகராஜா, அபிரா சிவகுமாரன், கௌசல்யா ராமச்சந்திரன், பிரணவி சிவதாஸ், சுதர்சனா சிவசக்தி, உமாஜினி கமலானந்தன், உதயகலா துரைராஜா, காயத்திரி சிவபாலன், ஜநித்ரி ஏரம்பமூர்த்தி, கஜலக்சனா சத்தியசீலன், கஜாந்தினி அருட்சோதி, கௌசிகா பாலேந்திரன்.

**யாழ்.இந்து**

குகாநந்தன் நிருஜன், நரேந்திரன் திருத்தணிகன், முத்துலிங்கம் வாகீசன், மோதனீஸ்வரன் ரமணன், நடராசா பிரணவன், சுந்தரலிங்கம் டினேஷ்சாந்த், நாகேஸ்வரன் திரியுகன், குமாரகுலசிங்கம் விமலன், விக்கினேஸ்வரன் சுதர்சன்.

**வடமராட்சி மெதடிஸ்த உயர் பாடசாலை**

ஐயாத்துரை யோகல்யா, கந்தசாமிக்குருக்கள் கோபிகா, குணராஜா பபிகா, மோகன்ராஜ் கோபிகா, ராஜகுலேந்திரன் சுகன்யா, தங்கராஜா பிரதீகா, தர்மதயாளன் தர்சிகா, கேதீஸ்வரன் கேமசிந்துஜா, கிருபாகரன் சுஜானி, செல்வேந்திரராஜா சுபர்ணா, ஸ்ரீ முருகமூர்த்தி சோபிகா.

**ஹாட்லி**

பாலகபாலன் கோகுலன், மகாலிங்கம் பிரதீபன், சிவராசா சிவசேகர், கிருஷ்ணசாமி சிறீகுமார், சரவணபவன் விதுரன்.

**கொக்குவில் இந்து**

ராஜசேகரம் கௌசிகன், தனபாலசிங்கம் லவீந்திரன், யோகேஸ்வரன் சிறிநிசிந்தன், திருஞானசெல்வம் தர்சன், தேவராஜா விதுர்சன், தனுஜா சிவானந்தன்.

**யாழ்.இந்து மகளிர்**

சுபாஜினி மணிவண்ணன், கேனகா சித்திராங்கன், சுதாசினி தங்கராஜா.

**ஸ்கந்தா**

மாதுமை சிவாஜி, கருணசேகரம் விஷ்ணு.

**யூனியன்**

ஜெ.சந்துருகேசன், க.கபீர்த்தனா.

**கரவெட்டி விக்கினேஸ்வரா**

சாமந்தி சொக்கலிங்கம்.

**உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்**

சித்திரவேல் சர்மிளன்,

**உடுப்பிட்டி மகளிர்**

ஜெயந்தா துரைநாயகம், மிதுலா பற்குணராசா.

**நெல்லியடி ம.ம.வி**

ஆண்யா தனபாலசிங்கம்.

**வடமராட்சி பெண்கள் கல்லூரி**

பிறேமினி தெய்வேந்திரம்.

**புற்றளை மகாவித்தியாலயம்**

பராராஜமூர்த்தி நிலுஷியா.(அ-1-2)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
*சிவகுமாரன் - செல்வராணி*
தம்பதியினரின் செல்வப் புதல்வி

**செல்வி அபிரா**

(மாணவி, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

அவர்கள் கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி (10A) பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ கருணைக் கடலாம் காமட்சியம்பாளை பிரார்த்திக்கின்றோம். இவருடன் சித்தியெய்திய ஏனைய நீர்வைமண் பெற்றெடுத்த மாணவச்செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
த.பரராசசிங்கம்J.P (சித்தப்பா) குடும்பத்தினர்,
மிதிலா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(72744)



## திருமறைக் கலாமன்றம்

இசைநாடகப் பிரிவும்
கலைத்தூது அழகியல் கல்லூரியும்
இணைந்து நடத்தும்

## கலைநிலா அரங்கு

காலம் : 5,6 ஏப்ரல் 2008
(சனி, ஞாயிறு நேரம் பி.ப. 4.30 மணி

இடம் : கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

**நிகழ்ச்சிகள்**

*05.04.2008 சனிக்கிழமை*

★ இசைக்கச்சேரி
(சங்கீத கலாவித்தகர் திருமதி சறோஜா ஜஸ்ரின் குழுவினர்)

★ இசைநாடகம்
பூதத்தம்பி (ஒரு பகுதி)
(கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினர்)

*06.04.2008 ஞாயிற்றுக்கிழமை*

★ இசைக்கச்சேரி
(இசைக்கலைமாணி திருமதி சுகன்யா அரவிந்தன் குழுவினர்)

★ இசை நாடகம்
அரிச்சந்திர மயான காண்டம்(ஒரு பகுதி)
(கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே. 021-222-2393 (C/552126)

திருமறைக் கலாமன்றம்



**SHAMROCK**
Eachahamoddai Rd. Ja

* O/L Day Class ஆரம்பம் 09.04.2008 8a.m
* A/L 2008 கலை, வர்த்தக, கணித பிரிவுகள்
* Gr.1 முதல் O/L வரை 10&11 Eng. Lit.
* Gr.5 புலமைப் பரிசில் (ஞாயிறு பரீட்சைகளுடன்)

SINHALA
(புதிய பிரிவு)
Mon., Wed.5pm
Sun. 9am


# சமய தீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.4

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை சிவனடியார்களுக்கு சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

சிவப்பிரம்மஸ்ரீ தியாக.உமாசுதக் குருக்கள் அடியார்களுக்கு சமய தீட்சை செய்துவைப்பார். (202-207)

# எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு புற்று நோயாளருக்கு சத்துணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.4

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளருக்கு இம்மாதம் 12 ஆம் தகதி சனிக்கிழமை சத்துணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

புத்தாண்டை முன்னிட்டு, அமெரிக்கா வில் வசிக்கும் பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கத்தின் அன்பளிப்பாக இச்சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை இம்மாதம் பன்னிரண்டாம் திகதி சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் விடுதிக்கு வருமாறு புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் தெரிவித்தார். (அ)


## கண்ணீர் அஞ்சலி

## த. பஞ்சலிங்கம்



(உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி) யாழ்ப்பாண கல்வி வலயம், சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

கடமையுணர்வும் கடின உழைப்பும் நற்பண்பும் சேவை மனப்பாங்கும் ஒருங்கே அமையப்பெற்ற பெருமகனின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுடன் நாமும் பங்கேற்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம்,
தமிழர் ஆசிரியர் சங்க கோப்பாய் ஆசிரியர்
கலாசாலைக்கிளை சார்பாக.

(72739)



## 31ஆம் நாள் நினைவலைகள்



திருமதி
இராசேந்திரம்(அருமை)
முத்துப்பிள்ளை

பிறப்பு 1933.05.30
இறப்பு 2008.03.05


அன்னையே உன் முகம் கண்டு
நான்கு திங்களானதம்மா - உன்
நினைவு மாற ஜென்மங்கள்
ஆயிரம் ஆகுமம்மா.

*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(72737)

கசிந்த விழிகளுடன்
நல்லையா குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர்கள் யாழ். அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது...

## மடுப்பகுதியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இதனை முறியடித்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் கடும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன. நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் சில மணிநேரம் மாத்திரம் ஷெல் வீச்சு நிறுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ள மதகுரு ஒருவர் , புகைமண்டலம், காதைப் பிளக்கும் சத்தமும் நீடிப்பதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

மடுத் தேவர்யத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் பகுதியில் கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

மடுத் தேவாயத்தின் சில ஜன்னல்கள் ஷெல் வீச்சுக் காரணமாக சேதமடைந்துள்ளன எனவும் தாங்கள் தங்கியிருந்த கட்டடத்திற்குள் ஷெல் சிதறல்கள் வீழ்ந்தன எனவும் அந்த கிறிஸ்தவ மதகுரு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மடுத் தேவாலயப் பகுதியில் ஆயுத மேந்திய எவரும் இல்லையென்பதை உறுதி செய்துள்ள அவர், மடுவிலிருந்து பாலம் பிட்டிக்குச் செல்லும் வீதியிலேயே ஷெல் கள் வீழ்ந்து வெடிக்கும் சத்தம் கேட்பதா கவும் தெரிவித்துள்ளார்.

மடுத் தேவாலயத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தேவாலயத்தின் சவக்காலைப் பகுதியிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இது இவ்வாறிக்க, மடுப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தமது கட்டுப் பாட்டுப் பகுதியை நோக்கி வந்துள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. (அ-உ)

## இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருக்கும் விடுதியின் சாப்பாட்டறைப் பகுதி சேதமடைந்திருப்பதாகவும், அருகில் இருக்கின்ற கிணற்றுப் பகுதியிலும் இராணுவத்தின் குண்டுகள் வீழ்ந்து வெடித்து ஆலயத்தின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியிருப்பதாகவும் - விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (அ-2)

## மடுமாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கி பேட்டியில் மேலும் கூறியதாவது:-

''காலங்காலமாக மக்களுக்கு அருள் பாலித்து வரும் மடுமாதா திருவுருவச் சிலையைப் பாதுகாப்பான இடம் நோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை தேவாலய மதகுருமாருக்கு வழங்கியிருந்தேன். அதன்படி நான்கு குருமார்கள் திருவுருவச் சிலையைப் பாதுகாப்பான இடம் நோக்கி கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் '' - என்றார் இராயப்பு ஜோசப்.

உயிர்ப் பாதுகாப்புடன் இருக்க முடியாத கடைசிக் கட்ட நிலையில் திருவுருவச் சிலையைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்வதென்று முடிவு எடுத்தோம். இது எங்களுக்கு மிகவும் கடிமான முடிவாக இருந்தது. இதுவொரு துர்ப்பாக்கியமான நிலை. இந்த நிலைக்குத் தள்ளப்பட்டமை மிகுந்த வருத்ததை ஏற்படுத்துகின்றது.

திருவுருவச் சிலைதற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே உள்ளதென்று கூறிய ஆயர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த சில தினங்களில் தீர்மானிக்கப்படும் .

அத்துடன், தேவாலய மதகுருமார்கள் சிலர் ஷெல் வீச்சுச் சிதறல்களிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்கள். தேவாலயத்தில் இருக்கும் மதகுருமார்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. - என்றார்.

## தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஆசிரியராகவும், அதிபராகவும் பல வருடங்கள் கல்வி சேவையாற்றிய அமரர் பஞ்சலிங்கம் நீண்டகாலமாக தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தன்னை இணைத்து ஆசிரியர் களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தார். குடாநாட்டில் பொது அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு போராட்டங் களில் பங்களிப்பு செய்தார்.

அவரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர் மனைவியையும் மூன்று புதல்வர்களையும் விட்டுச் சென்றுள்ளார். (அ-1)

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. போன்றவற்றின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதேவேளை, ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, சித்தார்த்தனின் புளொட், ஸ்ரீதரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி ஆகியவை சேர்ந்து அமைத்த கூட்டமைப்பு மட்டக்களப்பில் மாத்திரம் களத்தில் உள்ளது. அந்தக் குழு திருகோணமலையில் போட்டியிடத் தாக்கல்செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அதேசமயம், அக்குழுவின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் சிலர் கடைசி நேரத்தில் பின்வாங்கியதால் அங்கு அந்தக் கூட்டமைப்பு வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை. (அ-சி)

A/L - 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
புதிய பிரிவுகள்
இம்மாதம் 12 ஆம் திகதி
காலை 8.30 இற்கு ஆரம்பமாகும்.
மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்
DMI
நாவலர் வீதி ஸ்ரான்லி வீதி

மாணவர்களே...!
பட்ட, பட்டமேற்படிப்பைத் தொடர்வதற்கான
அரிய சந்தர்ப்பம்: Student VISA
UK UNIVERSITY of GREENWICH and UNIVERSITY of LONDON
July, September கல்வி ஆண்டு, மாணவர்களுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்
Part Time JOB - Students are allowed to work up to 20 Hours a week during term - time, any number of hours during vacations.

| Undergraduate Courses | Postgraduate Courses |
| --- | --- |
| BSc (Hons) in Computing<br>BSc (Hons) in Business Information Technology<br>BA (Hons) Accounting and Financial Management<br>BA (Hons) Business Management<br>BSc Accounting & Finance,<br>BSc Business, BSc Economics<br>BSc Management, Bsc Economics & Management | * Postgraduate Diploma in Distributed Computing Systems / MSc<br>* Postgraduate Diploma in Computing / MSc<br>* Postgraduate Diploma in Internet Technology and e-commerce / MSc<br>* Postgraduate Diploma in Computer Systems and Networking<br>* Masters in Business Administration - MBA<br>* Executive Masters in Business Administration EMBA |

IDM இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக் கல்லூரி
216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021-2229901

BEACON யாழ்.நகர்
கலை, வர்த்தக வகுப்புக்கள்
குதூகல ஆரம்பம்:- 05.04.2008
காலை 8 a.m
ஆசிரியர் விவரம் 2ஆம் பக்கத்தில்

நாளை ஆரம்பம்
A/L வரலாறு
பத்மன் B.A.(Hons) His. Spl.
காலை -11 மணி
DMI
நாவலர் வீதி.

நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
யாழ்.நகரில் முன்னணி ஆசிரியர் குழுவினால்
O/L Day Class
ஆரம்பம்:- 07.04.2008 Mon 8 a.m
அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை:417.K.K.S வீதி யாழ்/இந்துக்கல்லூரி அருகில் யாழ் .
(இரு இடங்களிலும்)
யாழ் நகரில் தன்னிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவையில்
பிரிவு 2
O/L DAY CLASS-(8.30-2.30)
ஆரம்பம் 07.04.2008 (8.30 MON)
(F/552088)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், - யாழ்ப்பாணம்.
K.K.S. றோட், இணுவில்.
(இரு இடங்களிலும்)
மீண்டும் புதிய பிரிவு
A/L 2010
கலை - வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 06.04.2008 ஞாயிறு
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

யாழ் நகரில் முன்னனி ஆசிரியர் குழுவினால்
மீண்டும் ஒரு புதிய பிரிவு
A/L 2010
ஆரம்பம்:- 05.04.2008 sat.
கலை, வர்த்தகப் பிரிவு
சனி காலை 7.00 மணி
கணித, விஞ்ஞானப் பிரிவு
சனி மாலை 3.00 மணி
நாவலர் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், மானிப்பாய்
ஆகிய மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில்
O/L Day Class
ஆரம்பம் 09.04.2008 புதன் 8 a.m
குறிப்பு: மானிப்பாயில் ஏனைய வகுப்புகள் பிற்பகல் 4மணிக்கு.

மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14
மிதிவெடிசெயற்பாட்டுக்கும் விழிப்புணர்வுக்குமான
சர்வதேச தினம் ஏப்ரல் 4 - இன்றாகும்.
சர்வோதயம் யுனிசெவ்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org